பேயக்கருமபு... (இராதாமணாளன்..)

# திராவிடநாடு

38

25—3—56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா



எங்கள் பெரியார்

★

எதிர்பார்க்கலாமா?

★

புனுகு பூச்சு போதாது!

★

என்ன இல்லை, வாழ?

★




தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜைண்டைனுவில் 22,870 அடி (சுமார் 350 தென்னைமரம் உயரம்) உயரத்தில் அகாங்குவா என்றொரு சிகரம் உண்டு! அந்தச் சிகரத்தின் உச்சியில், தன்னுடைய படத்தையும் தன் மனைவியான ஈவாபிரானுடைய படத்தையும் கொண்டுபோய் வைத்திருந்தானும் ஜான்பிரான். படங்களை வைத்தது மட்டுமல்ல அந்தக் குன்றுக்கும், அதனருகிலிருந்த இன்னொரு குன்றுக்கும், தன் பெயரையும் தன்னுடைய மனைவி பெயரையும் சூட்டினுனும். அந்தளவுக்கு, அவன் சொல்லே சட்டமாகக் கருதப்பட்டது, அர்ஜைண்டைனுவில்! ஆனுல் இன்று...அந்த சர்வாதிகாரி, மக்களால் விரட்டப்பட்டு, இருக்க இடம் கிடைக்காது அலைந்துகொண்டிருக்கிருன், ஊருக்கு ஊர். அவனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய சர்க்கார் கடந்த 14-ந்தேதி, தமது இராணுவத்தை அனுப்பி, குன்றின் மேலிருந்த தம்பதிகள் படங்களை இழுத்து எறிந்ததோடு, அந்தக் குன்றுகளின் பெயர்களையும் மாற்றிவிட்டது.

*

**மகாரியாஸ்** எனும் பாதிரியார் தலைமையில் வெள்ளைக்காரர்களை எதிர்த்து சைப்ரஸ் தீவில், கிளர்ச்சி நடக்கிறதல்லவா? அதன் விளைவாக, பமகுஸ்தா எனும் நகரில் மாணவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்! அவர்களை அடக்க பிரிட்டிஷ் துருப்புகள், பாய்ந்தன. அதன் விளைவாக, 18-வயதுள்ள **பெட்ராசிஸ் இயல்லோரிஸ்** எனும் மாணவன் சுடப்பட்டு இறந்தான். அவன் எந்தத் தெருவில் சுடப்பட்டு வீழ்ந்தானே, அந்தத் தெருவுக்கு அவனது பெயரைவைக்க வேண்டுமென்று, அவன் படித்த கல்லூரி ஆசிரியர்கள் ஒன்றுகூடி நகரசபையைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றினுர்கள்! அவனுடைய பெயரால், அத்தெரு இனி விளங்கப்போகிறது. நாட்டிற்காக உயிரைக்கொடுத்த உத்தமனின்நினைவு விளங்க, பழைய பெயர் மாற்றப்படப்போகிறது.

*

பழைய பெயர் பொருத்தமானதாக இல்லை, என்பதற்காக கர்னூல் மாவட்டத்தில் இது காறும் கம்பம் தாலுகாவாகவும் சிர்வேல் தாலுகாவாகவும் அழைக்கப்பட்ட தாலுகாக்களை, முறையே **சித்தலூர், அல்லகாடா** என்று மாற்ற முடிவுசெய்திருக்கிறது, ஆந்திர அரசாங்கம். அதற்கான முடிவை கடந்த பிப் 11-ந்தேதி செய்திருக்கிறது.

டில்லி சர்க்கார் கூட கடந்த பிப் 28-ந்தேதி, டில்லியிலுள்ள ஐந்து பெரிய ரோடுகளின் பெயர்களை மாற்றிவிட்டு புதிய பெயரை வைப்பதாகத் தீர்மானித்திருக்கிருர்கள்.

'கல்கி' ஏட்டில் 'ஆற்றங்கரையினிலே' என்ற தலைப்பில் எழுதும் பேராசிரியர் சேது, குறிப்பிடுகிருர், 'தமிழின் நீர்மையறியாது பெயரிடுதல், தவறு என்பதைக் காலாடிப் பேட்டையும், அம்பட்டன் வாராவதியும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன' என்பதாக.

நமது காமராஜ் அரசோ, பணத் திமிங்கிலம், மோசடி ஆள், டால்மியாவின் பெயரால் விளங்கும் ஊரின் பெயரை மாற்றிவிட்டு பழந்தமிழ் பெயரான **கல்லக்குடி** என்பதை இட்டால் தன்னுடைய கித்தாப்புப் போய்விடுமென்று கருதிக்கொண்டிருக்கிறது! அப்படிப் பட்டவருக்கு 'பராக்கு' பாடுவதைப் பெரும்பேறு எனக் கருதும் 'சுயமரியாதை'க்காரர்களும் இருக்கிருர்கள்.

*   *   *

**பானிவாலா மகராஜ்** என்கிற ஒரு ஆசாமியை அழைத்து வந்து தண்ணீர் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க முயன்ருரல்லவா, நமது மதியூக மந்திரி பக்தவச்சலம்! அந்த பானிவாலாவைப் பற்றி ராஜ்கோட்டிலிருந்து மார்ச் 13-ந்தேதி வரும் செய்தி இது:— பானிவாலா மகராஜ் என்று கூறிக்கொண்டவரின் பேச்சை நம்பியதில் சௌராட்டிர சர்க்காருக்கு ரூ. 3½ லட்சம் நட்டம் ஏற்பட்டதாக மேற்படி அரசின், நிதியமைச்சர் மனுபாய்ஷா சட்டசபையில் வெளியிட்டார். பானிவாலா மகராஜ் தம் சக்திபற்றிச் சொல்லிக்கொண்டது வெறும் பித்தலாட்டமென்றும், அவர் முதலில் மாதம் ரூ. 200 சம்பளத்தில் சர்க்கார் வேலைக்கு மனுப்போட்டதாகவும் பிறகு அவர் மாதம் ரூ. 250 சம்பளத்தில் நியமிக்கப்பட்டதாகவும் மந்திரி சொன்னுர். எப்படி, யோக்கியதை! இதற்கு இங்கே செலவழிந்த பணம் யார் வீட்டுச் சொத்து!!

*   *   *

ஆவடியில் காங்கிரஸ் மாநாடு கடந்த ஆண்டு நடைபெற்றதல்லவா? அதற்காகச் சென்னை சர்க்கார் செலவிட்ட தொகை என்ன தெரியுமா? ஆயிரம் இரண்டாயிரமல்ல! ரூபாய் பத்து லட்சம்!! பிரமிப்பு அடையாதீர்கள், நடந்தது கட்சி மாநாடு. அதற்கு பொது வரிப்பணம் கோவிந்தா! அந்த மாநாட்டைச் சினிமா பிடிப்பதற்காக மட்டும் ரூ 12,300 செலவாம். எப்படி, 'ஏழை பங்காளன்' காமராஜ் சர்க்கார்!!

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 38
25—3—56

# எதிர்பார்க்கலாமா?

"மக்கள் அபிப்பிராயத்தை அறிந்தபின்பே, எதையும் முடிவு செய்வேன்," என்கிறார் முதலமைச்சர் காமராஜ்.

இந்த மாண்பும், மக்கள் மன்றத்திடம் அச்சமும் இல்லாத காரணத்தால் அஞ்ஞாதவாசத்துக்கு இரையான ஆச்சாரியார்கள் அநேகம். ஆதலால், அன்பர் காமராஜரின் இந்த அறிவிப்பைக் கேட்டு, அகமும் புறமும் மலர்ந்த நிலையில் காட்சி அளிப்போர் இருக்கிறார்கள்.

"இந்திமொழியில் மசோதாக்களையும் சட்டங்களையும் அச்சிடுவதற்காக, 'மானோடைப்' அச்சுச்சாதனங்களை வாங்க சென்னை அரசாங்கம் பணம் ஒதுக்கியுள்ளது. இதற்கான மொத்த செலவு சுமார் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது."

கட்டாய இந்தியைப் புகுத்துவேன், கன்னியரும் காளையரும் ஆயிரமாயிரமாகச் சிறைச்சாலை சென்றாலும் கலங்கேன், ஆள்வது நானா அல்லது ஈ. வே. இராமசாமியா, தாலமுத்து நடராசன் உயிர்போனால் என்ன, தடியுண்டு என்னிடம், தர்பார் நடத்தும் அதிகாரம் படைத்தவன் நான் என்று எந்த ஆச்சாரியார் முழக்கமிட்டு 'இந்தி'யை இங்கே விதைக்கப் பாடுபட்டாரோ, அதே ஆச்சாரியார்,

"ஆங்கிலம் அந்நியர் மொழியென்பதால் அதை ஒழிக்க வேண்டும் என்கின்றனர். அப்படியானால் மொகலாயர் கட்டிய தாஜ்மகால் எதற்கு? ஜனாதிபதி குடியிருக்கும் ராஜபவனம் எதற்கு? பிரிட்டிஷார் விட்டுச்சென்ற தண்டவாளங்கள், தந்திப் போக்குவரத்துகள் எதற்கு? ஆங்கிலம் நீடிப்பதைவிட அமெரிக்கப் பொருளாதார உதவியை சுதந்திர இந்தியா கையேந்தி வாங்குவது பெரிய அவமானமல்லவா?" என்று, சென்னை மாநாகரிலே மார்ச் 14-ந்தேதி முழக்கமிடுகிறார். தமிழர்களின் துயர் துடைக்க வந்தவர் என்று பாராட்டுப் பெறும் பாக்கியத்தை அனுதினமும் அனுபவிக்கும் காமராஜரின் சர்க்கார் இந்தியில் சட்டங்களையும்—மசோதாக்களையும் கூடவாம்!!—அச்சிட அச்சகம் வாங்கப்போகிறது, ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ரூபாய் செலவில்.

சென்ற சில கிழமைகளுக்கு முன்பு, தாண்டன் என்பார், தாண்டிக்குதித்தார், டில்லி சட்டசபையில். டைப்அடிக்கும்இயந்திரத்தில்இந்தியில்எண்களைசெய்ய போதிய முயற்சிகள் செய்யவில்லையென்பதாக. அவரை, இந்தி மொழி வெறியர் என்றோம்—வடநாட்டுக்காரரின் வம்பினைப் பார் எனக் கூறினோம். காமராஜர், தாண்டனல்ல, தமிழ் மகன்!! பச்சைத் தமிழன், எனப் பாராட்டப்படுபவர்-அச்சகம் அமைக்கப்போகிறார், இந்தி அச்சகம்!!!

"அடிப்படை இந்தி இலக்கணத்தை" ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனைவருக்கும் விளங்கும்படி செய்யப்போவதாக டில்லியில் ஒரு யோசனை உள்ளது. இதனை, டில்லி மேல்சபையில் எள்ளி நகையாடியிருக்கிறார்கள்! "என்ன அமைச்சரே! 'அடிப்படை' இந்தி என்றால் அது என்ன இந்தி ஐயா? அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டிருக்கும் இந்தி'யா! அல்லது இது ஒரு புது இந்தி'யா!!" என்று கேட்கிறார், டாக்டர் ரகுபீர்சிங் என்பவர். நாராயண் எனும் இன்னொரு உறுப்பினரும் மௌலானுபருகி என்பவரும் கிண்டலும் கேலியும் அள்ளி இறைக்கிறார்கள்! பூபேஷ்குப்தா என்பவர், "நெக்—டைக்கு, கந்த்—லங்கோடு என்பதுதான் இந்தி மொழிபெயர்ப்பு என்கிறார்களே, இது என்ன இந்தி!" என்று கேட்கிறார். சிரிக்கிறார்கள், ஏனைய உறுப்பினர்கள். இந்த இலட்சணத்தில், இந்தி, வடநாட்டு உறுப்பினர்களால் கடந்த பிப் 29-ந் தேதி டில்லி மேல்சபையில் 'தாலாட்டப்படுகிறது' ஆனால், தமிழர் என்று போற்றப்படுபவர்களை அமைச்சர்களாகக் கொண்டிருக்கும் சென்னை சர்க்கார் இந்தியில் சட்டங்களை அச்சடிக்கப் போகிறதாம்!!

1960-க்குள் இந்தியை அரசாங்க மொழியாக்கப் போகிறோம் என்று டில்லி துணைமந்திரியொருவர், தெரிவித்தார், அங்கு. "அது எப்படி முடியும்? இப்படிக் கூற ஆணைப்பட்ட நேருவே, யோசிக்கும் போது யாரிந்தத் துணைமந்திரி? இவருக்கேன் அவசரம்?" என்று கேட்டுத்தலையங்கம் தீட்டியிருக்கிறது, இங்குள்ள தினமணியும், சுதேசமித்திரனும்! ஆனால், 'நம்ம' காமராஜர் அச்சகம் வாங்க, ஒருலட்சத்து இருபதினாயிரம் ரூபாயை ஒதுக்குகிறார் இந்தியை வளர்க்க.

இந்த இலட்சணத்தில், "மக்கள் அபிப்பிராயத்தை அறிந்தபின்பே எதையும் முடிவு செய்வேன்" என்கிறார், இந்தியின் விஷயத்தில், மக்களின் அபிப்பிராயம் என்ன? அறியாரா அவர்!

பொது மக்களின் அபிப்பிராயம் அறிந்துதான் தட்சிணப் பிரதேச அமைப்புப் போன்ற பிரச்னையில் முடிவுக்கு வருவாராம்—இப்படிப்பட்டவர் அமிருதசஸ் மாநாட்டிலே, தோழர் கக்கனை, இந்திபற்றிய தீர்மானத்தைக் கொண்டுவரச் செய்ய அனுமதிக்கலாமா?

தமிழ் நாட்டின் உயிர்ப் பிரச்னையான இந்தி ஒழிப்பு விஷயத்தில் பெரியார் அவர்கள் காமராஜர் மூலம் வெற்றி காணக் கூடுமானால், நம்மை விட மகிழ்ச்சிகொள்வோர் இருக்க முடியாது. அதற்கு, முதல் காரியமாக, சென்னைசர்க்காரின் அச்சகம் அமைக்கும் முயற்சியை 'வாபஸ்' பெருமாறு செய்யக் கோருகிறோம், பெரியார் அவர்களை! ஒரு இலட்சத்துஇருபதினாயிரம்ரூபாய், நமது வரிப்பணத்தில் மிச்சப்படும்; அதைவிட, நமது வாயை அடைத்து, "மக்கள் அபிப்பிராயத்தை அறிந்தபின்பே எதையும் முடிவு செய்பவர் காமராஜர்" என்கிற உண்மையை நிருபித்த பெருமையும் கிடைக்கும்!! எதிர்பார்க்கலாமா?




# பேய்க்கரும்பு

கே.ஜி. இராதாமணாளன்

பிரபல எழுத்தாளனான பஞ்சாட்சரத்திற்கு அன்று எண்ணங்கள் கோர்வையாக ஓடவில்லை. எழுதி எழுதி காகிதங்களைக் கீழே சுருட்டிப் போட்டான். பாவம், எழுத மிகவும் சிரமப்பட்டான். சிரமமா அது — இல்லை இல்லை— பிரசவ வேதனை!

பேனாவை மூடி வைத்துவிட்டு, "சூடா! சூடா!" என்று தன் மனைவியை அழைத்தான்.

"உன் அடுப்பங்கரைவேலையைக் கொஞ்சம் கட்டி அப்படிவைத்துவிட்டு — எழுதியதுவரை எனது நாடகத்தைக் கேட்டுவிட்டு-பிறகு உனது அபிப்பிராயத்தைச் சொல்!"

"சரி, படியுங்கள்!"

"இந்த நாடகத்திலிருக்கும் முழு ரசத்தையும் அனுபவிக்க வேண்டுமானால், நாடகத்தின் சூழ்நிலையைப்பற்றி முதலில் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும்!"

"சூழ்நிலையைப் பற்றி சொல்வதாகக்கூறி, பிரம்மலோகம், இந்திரலோகம்......இப்படிச் சுற்ற ஆரம்பித்துவிடமாட்டீர்களே?"

"அட அட, என் உணர்ச்சியையே பாழ்படுத்திவிடுகிறாயே! உன்னுடைய விளையாட்டிற்குச் சமய சந்தர்ப்பமே கிடையாதா?" என்று வெறுப்போடு கேட்டான்.

"தப்பு! தப்பு! இனிமேல் அப்படியெல்லாம் பேசமாட்டேன்."

"விகாரமானவன் அவன் — ஆனால் மகா கவி! இரசிகன், புலவன், கலைச்செல்வம், அவனிடம் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. கவிதைக்காகவே அவன் வாழ்கிறான் — கவிதையும் அவனால் வாழ்கிறது. தித்திப்பானபேச்சும்—திடமான மனமும் கொண்டவன்........"

"அது சரி, அந்த 'அவன்' யார் என்று சொல்லவில்லையே?"

"என்னுடைய நாடகத்தின் கதாநாயகன்"

"அவனுக்கு ஊர் பேர் கிடையாதோ?"

அவன் பெயர் சூரியா.

"சூரியா வெளிக்கு அழககா இல்லாவிட்டாலும், உண்மையில் அழகானவனே!"

'இருக்கலாம்!"

"இருக்கலாம் அல்ல நிச்சயமாய் இருக்கிறான்!"

"சரி ஒத்துக் கொண்டேன்— அவன் பால சூரியனே!"

"கட்டழகு மிக்க ஒரு கன்னிப் பெண்ணை அவன் காதலிக்கிறான்; இதய அரங்கில் சதிராடிக் கொண்டிருந்த அந்த இன்பவல்லியை, இரவுபகலாக நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருக்கிறான்!"

"வேலை வெட்டி செய்யாமல் நிம்மதியாய் சாப்பிட்டுக்கொண்டிருக்க, உங்க அப்பாவைப்போல, அவன் அப்பாவும் நிறையச் சொத்து வைத்துவிட்டுப் போயிருப்பார் போலிருக்கிறது?"

"இப்படிப்பட்ட சந்தேகங்கள் தானே உனக்குத் தோன்றும்!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே கூறினான்.

"எனக்குத் தெரியாமல் கேட்கிறேன்! சோற்றுக்கு வழிதேட வேண்டுமே என்ற கவலை அவனுக்கு இருந்திருந்தால், இப்படி ஒரு பெண்ணை நினைத்து இரவு பகலாக ஜபம் பண்ணிக்கொண்டிருக்கமுடியுமா?" என்று உண்மையிலேயே சந்தேகங்கொண்டவளைப் போலக் கேட்டாள்.

அந்த நேரத்தில் மூன்று நான்கு பேர் ஒன்றாகச் சேர்ந்துபாடும் பாட்டு, அந்த அறையினுள் நுழைந்தோடி வந்தது.

**பஞ்சை பராரிகள் கோவிந்தா!**
**நீங்கள் பாசங்காட்டுங்கள் கோவிந்தா!**
**உண்ண உணவில்லை கோவிந்தா!**
**உடுக்க உடையில்லை கோவிந்தா!**
**பசியால சாகிறோம் கோவிந்தா!**
**நாங்கள் குளிரால்நடுங்குகிறோம் கோவிந்தா!**
**இல்லாதவர்கள் கோவிந்தா!**
**எங்களுக்கு இல்லை என்று சொல்லாதீர்கள்—**
**கோவிந்தா!**

"யாரடா அது, கழுதைபோலக் கத்துவது? இதென்ன சத்திரமா? போய்த் தொலையுங்கடா?" என்று பஞ்சாட்சரம் உரத்த குரலில் கத்தினான்.

"பாவம், யாரோ பிச்சைக்காரர்கள் போலிருக்கிறது — கொஞ்சம் அரிசி போட்டால் போகிறார்கள்! இப்படி எதற்காகக் கோபித்துக் கொள்கிறீர்கள்!" என்று பரிவான குரலில் சூடாமணி சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

பிச்சைக்காரர்களுக்கு அரிசி போட்டு அனுப்பிவிட்டு, திரும்பவும் அந்த அறையினுள் அவள் வந்தாள்.

"பாவம், அவர்கள் ஊரில் புயலும் வெள்ளமும் வந்து, ஊரே அழிந்துவிட்டதாம்! கண்கள் உள்ளே சென்று, கன்னங்களில் குழி விழுந்து, முதுகெலும்போடு வயிறு ஒட்டி, பக்க எலும்புகள் வெளியே தெரிய—பிணங்களிலும் கேடுகெட்ட பிணங்களாக இருக்கிறார்கள்!" என்று கவலை நிறைந்த குரலில் அவள் பேசியதைக் கேட்டதும், அவன் காதுகளை இரு கைகளாலும் மூடிக்கொண்டு, "இந்தப் பாழும் பேச்சையெல்லாம் எதற்காகஎன்காதில்போடுகிறாய்?" என்று சீறினான்.

"இதுவா அத்தான், பாழும் பேச்சு? பாபம், வீடுவாசலை இழந்துவிட்டு, உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்துவிட்டு, சிறகொடிந்த பறவைகள் போலாகி, உண்ண உணவோ, குடிக்க கூழோ இல்லா

மல், 'அம்மா! தாயே!' என்று அவர்கள் அடிவயிறு வலிக்கக் கதறுகிறார்களே-என்ன பரிதாபம்! அவர்கள் உடலில் கொஞ்சங்கூட சதையே கிடையாது — வெறும் எலும்புக்கூடு, பிரேத மனிதர்கள்! உயிர், அவர்களின் கண்களில் தான் இருக்கிறது. கோரமான அவர்களின் நிலையை எண்ணினால்........"

"போதும் போதும்! வாயைமூடு! தினந்தினம் சோற்றுக்கு இல்லாமல் எத்தனையோ நாய்கள் செத்துக்கொண்டுதான் இருக்கின்றன! அதற்காக என்னைக் கவலைப்படச் சொல்கிறாயா?"

"இதென்னங்கோ இரக்கமில்லாத பேச்சு — நாயும் மனிதனும் ஒன்றா?"

"ஆமாம்! கலையுணர்ச்சியில்லா விட்டால், நாயும்மனிதனும் ஒன்றுதான். நான் எழுத்தாளன்; அழகை நான் வணங்குகிறேன். ஆனந்தத்தை வரவேற்கிறேன். கண்டவைகளை, அனுபவித்தவைகளை அழகுச் சித்திரமாக்கி உலகத்திற்கு அளிக்கிறேன்! குளிர்ப் பூஞ்சோலையிலும், குதித்தோடும் அருவியிலும், தாமரைத் தடாகத்திலும், தாரகைகளின் ஒய்யாரத்திலும் என் பார்வையைச் செலுத்த வேண்டுமே அன்றி; சாக்கடையிலும் சுடலையிலும் செலுத்தக்கூடாது! நான் கேட்க வேண்டியது குயிலின் பாட்டே ஒழிய, வயிற்றுப்பசிப் பாட்டு அல்ல!"

"என் மனதில் தோன்றுவதைச் சொன்னால் — உங்களுக்கு இவ்வளவு கோபம் வந்துவிடுகிறது! நான் வருகிறேன்" என்று வெளிறிய முகத்தோடு கூறிவிட்டு, அவள் போகத் திரும்பினாள்.

"சூடா, சூடா," என்று அழைத்துக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்து, அவளது வளைக் கரத்தைப் பிடித்துக்கொண்டான்.

"உன் புன்னகையைக் கண்டால் தான், என் இதயம் மலருகிறது, கண்ணே........சரி, என்னுடைய நாடகக் கதையை எவ்வளவுதூரம் சொன்னேன்.........ஆமாம்........ அவள்......"

"அட, அவள் யாருங்கோ?"

"அவள் யார் என்று உனக்குச் சொல்ல மறந்துவிட்டேனா? அவள் தான் தேவதேவி, சூரியா காதலிக்கும் சுந்தரி"

"ஒகோ"

"பெயர் அழகாக அமைந்துவிட்டது அல்லவா? தேவதேவி எவ்வளவு ரூபவதியோ, அவ்வளவு குணவதி! எவ்வளவு குணவதியோ அவ்வளவு வித்தியாவதி, எவ்வளவு வித்தியாவதியோ, அவ்வளவு தனவதி. அதாவது, அழகும், கல்வியும், செல்வமும் மிக்கவள் அவள்"

"பாழும் கடவுள், எல்லாவற்றையும் ஒருத்திக்கேவா கொடுத்துவிடவேண்டும்"

"அவளது செல்வத்திற்கு ஆசைப்பட்ட ஒரு தந்திரக்காரன் ...அவன் பெயர் நாகசேனன்... —...........அவளைக் கல்யாணம் செய்துகொள்ள முயற்சி செய்கிறான். தேவதேவி வெள்ளை யுள்ளம் படைத்தவள் ஆனதால், அந்த வஞ்சகனின் கபடத்தை அவள் புரிந்துகொள்ளவில்லை. அந்த வேடதாரியின் வெளியழகில் சொக்கி—அவனது மாயப்பேச்சில் மயங்கி — அவனையே மணந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கிறாள். இதயமில்லாத ஒரு பணப்பேயின் வஞ்சகவலையில் தேவதேவி சிக்கி, வாழ்வைப் பாழாக்கிக்கொள்ளப் போகிறாளே என்று சூரியா உருகுகிறான். இந்தக் கட்டத்திலிருந்துதான் என்னுடைய நாடகம் ஆரம்பமாகிறது. இந்தக் கட்டத்தில் ஆரம்பித்தால் தான் கதை சுவையோடு விறுவிறுப்பும் இருக்கும்!"

"ஆமாம் அத்தான், நீங்கள் சொல்வது நிசம்தான்!"

"கதையைக் கேள்! ஒரு அழகான பூந்தோட்டத்தில், அல்லிமலர்கள் பூத்திருக்கும் செயற்கைத்தடாகம். அதன் பளிங்குக்கல் கரையின் மீது, தேவதேவியும் நாகசேனனும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறார்கள். நிலவின் வெளிச்சத்தில், அந்த அழகியின் முகம் பிரகாசிக்கிறது. அவளது பொற்கரங்களை அவன் பற்றுகிறான்—காமச்சிரிப்போடு! வளைக் கரத்தை நாணத்தோடு உதறிக் கொண்டு, அந்த வஞ்சிக் கொடியாள் எழுந்து நிற்கிறாள். காதற் பாடல் ஒன்றை, அவன் இனிமையான குரலில் பாடுகிறான். அந்த இசைக்கு ஏற்ற விதத்தில், அந்தக் கொடியிடையாள் நடனமாடுகிறாள்!........"

"அந்தப் பெண்ணுக்கு அப்பா அம்மா இல்லையா?"

"அவர்கள் எதற்கு இங்கே?" என்று இடிவிழுந்தவனைப்போல அவன் கேட்டுவிட்டு மேலால் படிக்கிறான்.

**நாகசேனன்:** தேவதேவி! கண்ணே! கருப்பாக இருக்கும் இந்த மேகத்தைப் பார்! கருங்குரங்கைப்போல அது மேலே குதித்துக்கொண்டிருப்பதால், பயந்த மான் குட்டிகளைப்போல அந்த நட்சத்திரங்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

**சூரியா:** கருமுகிலே அழகுமுகில்! இந்த உலகம் குளிர, அந்தக் கருப்பு மேகம் வானமுதைக் கொட்டுகிறது......

பஞ்சாட்சரம் படித்துக்கொண்டதை இடைமறித்து, "இவர்கள் பேச்சு, நம்பேச்சுப்போல இல்லையே" என்றாள்.

"கொன்றுவிட்டாய் சூடாமணி! என் உணர்ச்சியையே கொன்றுவிட்டாய். நாடகத்தின் ஆரம்பத்திலேயே காளிதாசனின் தரத்தை நான் பின்பற்றியிருக்கிறேன் — அதைத் தெரிந்துகொள்ளமுடியாமல், நீ என்ன இப்படி மட்டமாகக் கேட்டுவிட்டாயே" என்று சலிப்போடு அவன் பேசிவிட்டு, ஆத்திரத்தோடு அவளைப் பார்த்தான்.

"தெரியாமல் கேட்டுவிட்டேன்— நீங்கள் படியுங்கள்"

"இடைஇடையே நீ இப்படி விமர்சனம் செய்வதில்லை என்று சொன்னால் ஒழிய, நான் படிக்கப் போவதில்லை"

"சரி"

"அப்படியானால் கேள்" என்று அவன் விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினான்,

**தேவதேவி:** நீங்கள் பேசுவதைக் கேட்டால், வானத்திலிருக்கும் சந்திரனே இறங்கிவந்து கவிதை பொழிவதாகத் தோன்றுகிறது.

**நாகசேனன்:** (பேச்சை வேறு திசையில் மாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடு சட்டென்று அருகிலிருந்த செடியினின்றும் ஒரு ரோஜா மலரைக் கிள்ளி) இந்த ரோஜா மலர் எவ்வளவு அழகாக இருக்கிறது பார். இயற்கையின் அழகு அவ்வளவையும் இந்த மலர் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறதல்லவா, கண்ணே!

**சூரியா:** ஆனால் இந்த மலரில் உயிரே கிடையாது. உயிரில்லாத பதுமை எப்படியோ — அப்படித் தான் இந்த மலரும்.

அதைக் கேட்டதும் சூடாமணி

கலகலவென்று சிரித்துவிட்டான். கண்களில் தீப்பொறி பறக்க பஞ்சாட்சரம் அவளைப் பார்த்தபோது அந்த அறையின் வெளியில் மூச்சுத் திணற யாரோ இருமும் சப்தம் கேட்டது.

"யார் அது?" பஞ்சாட்சரம் ஆத்திரத்தோடு கேட்டான்.

"முத்தையாபோலிருக்கிறது" என்று வாயற்படியின் பக்கம் அவள் பார்வையைத் திருப்பினாள்.

பஞ்சாட்சரம் தலையில் அடித்துக்கொண்டு, "நேராநேரம் தெரியாமல் வருகிறார்கள். உள்ளே வந்துவிடப்போகிறார்— உடனே போய் அவரை வெளியில் அனுப்பி விட்டுவா" என்று முணுமுணுத்தான்.

முத்தையாவை அனுப்பிவிட்டு உள்ளே வந்த சூடாமணி, "கடிதம் ஒன்றைக் கொடுத்து அதைப் படித்துச் சொல்லுமாறு என்னைக் கேட்டார் அதைக்கேட்டதும் அவர் அப்படியே தலைமேல் கையைவைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார். வீட்டைத் தவிர இருந்த சொத்தையெல்லாம் விற்று, முதல் இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் செய்துவைத்தார். சொத்தெல்லாம் போனாலும், மகன் சம்பாதிக்கிறானே என்ற தைரியமாவது அப்பொழுது இருந்தது. அந்த ஒரே மகனும், போன மாதந்தான் இறந்துவிட்டான்! இருக்கிற அந்த வீட்டைவிற்றாலும் ஆயிரம்கூடக் கிடைக்காதே—எங்கிருத்தம்மா நான் மூவாயிரம் தருவேன்? என்ற பாவம், அவர் கண்ணீர்விட்டார், என்ன துரதிருஷ்டம். பெண்குழந்தைகளைப் பெற்றெடுப்பதே மகாபாவமாக இருக்கிறதே. ஏதேதோ எழுதுகிறீர்களே அத்தான், இதைப்பற்றி இந்த உலகத்திற்கு வெட்கம் வருவதைப்போல, ஒரு நாடகம் எழுதக் கூடாதா?" என்று கலங்கிய தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"பைத்தியக்காரி, இப்படிப்பட்ட சாமான்யமான விஷயமெல்லாமா காவியமாகும்?"

"உலகத்திற்குச் சம்பந்தம் இல்லாதவைகளை எழுதினால், அதனால் யாருக்கு என்ன பயன்?"

"பயனா — அந்தக் கேள்விக்கே இங்கு இடம் கிடையாது. கலை கலைக்காகவே. மயில் எதற்காக ஆடுகிறது? குயில் எதற்காகப் பாடுகிறது? அரும்பு எதற்காக மலராகிறது? தென்றல் எதற்காக வீசுகிறது?"

"நல்லவேளை, நீ எதற்குச் சாப்பிடுகிறாய்? எதற்காகச் சேலை கட்டுகிறாய்?" என்று கேட்காமல் போனீர்களே?

"எவ்வளவு விஷயமாக இருந்தாலும் உடனே சோறு துணி அளவிற்கு மட்டமாக இறக்கிவிடுகிறாயே! நீ நினைப்பது எவையோ—அவைகளுக்கு நேர் எதிரிடையானதுதான் கலை! கலைஞன் ஒருவன், வாழ்க்கையில் நடப்பவைகளை அப்படியே சித்தரிக்கக்கூடாது! இந்த உலகத்தைப் பற்றிய கவலையில்லாமல், வேறொரு புதுமையான உலகத்தைச்சிருஷ்டிக்க வேண்டும்"

"அதாவது, உண்மையில்லாதவைகளை எழுத வேண்டும் — அந்தப் பொய்ச்சரக்குத்தான் கலை என்று சொல்கிறீர்களா?"

"சூடாமணி! எது உண்மை— எது பொய் என்பது உனக்குத் தெரியுமா? பஞ்சத்தாலும் பட்டினியாலும் துடிதுடிக்கும் மனிதன், குடும்பத் தொல்லைகளால் கொட்டப்பட்டு உருக் குலைந்துபோன எலும்புக்கூடு, சூழ்ச்சிக்கும் கொடுமைக்கும் வஞ்சகத்திற்கும் பலியாகும் பிரேத மனிதன்—இவனைத்தானே நீ உண்மை என்று நினைக்கிறாய்? அவன் வெறும் பொம்மை. பொய்த் தோற்றம், நீர்மேல் குமிழியைப்போல அழியக்கூடியது. துக்கம் துயரம், பஞ்சம் பசி, சூது சூழ்ச்சி, வறுமை கொடுமை— இவைதானே உலகம்? இந்தப் பாழும் உலகத்திலிருந்து எவ்வளவு தூரத்திற்கு ஓடிப்போக முடியுமோ —அந்த அளவிற்குத்தான், ஒருவன் பெரிய கலைஞன் ஆகமுடியும்! இறங்கி வரமாட்டேன் — இறங்கி வரமாட்டேன் — சுவர்க்கத்தினின்றும் இந்தப் பாழும் உலகத்திற்கு இறங்கி வரமாட்டேன் என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் சும்மாவா சொன்னான். காளிதாசன் சிருஷ்டித்த சகுந்தலையும் துஷ்யந்தனும் எத்தனை நூற்றாண்டுகள், புதுமை மெருகும் இளமைத் துடிப்பும் குன்றாமல் வாழ்கிறார்கள்? அதுதான் காவியம்! சாதாரணமாக நம்மோடு வாழும் ஏழை ஒருவனுக்காகவோ, ஒருத்திக்காகவோ நாம் இலக்கியம் எழுத ஆரம்பித்தால், அது இலக்கியமும் ஆகாது— நிலைத்தும் நிற்காது! கம்பனைப் போல, காளிதாசனைப்போல இலக்கிய உலகில் ஒருவன் சுடர் விளக்காக ஒளி செய்யவேண்டுமானால்— வறுமையால் சுண்டி அழுக்கேறிய உடலில் பேனாவைத் தேய்த்துப் பார்க்கக்கூடாது. நம்மைச் சுற்றி வாழ்கிறார்களே, அவர்களெல்லாம் வெறும் பொய்த்தோற்றம்! புகை போல் மெல்ல மறைந்துவிடக் கூடியவர்கள். தித்திப்பான கரும்பு போலத் தோன்றும்—மென்று பார்த்தால் தெரியும், அது வெறும் பேய்க் கரும்பு என்று!..."

"நீங்கள் எதைப் பேய்க் கரும்பு என்கிறீர்களோ — அதைத்தான் நான் செங்கரும்பு என்கிறேன். பொய்த் தோற்றம் என்று எதை நீங்கள் கருதுகிறீர்களோ—அதைத்தான் நான் உண்மை என்று நினைக்கிறேன். உடன் வாழ்பவர்களின் நிலையை உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இயற்றப்படாத எந்த இலக்கியத்தையும், நான் உண்மையான இலக்கியம் என்று ஒத்துக்கொள்ளமாட்டேன். அதுதான் கலை என்றால், அந்தக் கலையே நமக்குத் தேவை இல்லை என்பேன்"

"பேய்க் கரும்பை, தித்திப்பான செங்கரும்பு என்றுநினைக்கும் உன் அறியாமைக்காகப் பரிதாபப்படுகிறேன், சூடா"

"சரி படியுங்கள்"

அவன் சரியாக நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு படிக்க ஆரம்பித்தான்:

சூரியா: தேவதேவி! இனி என்னால் இந்தக் கொடுமையைச் சகிக்கமுடியாது, பொறுக்க முடியாது. உன்னை நான் காதலிக்கிறேன்—பூசிக்கிறேன். காமம் கலந்தது அல்ல, என்னுடைய காதல் ......எனக்கேற்ற ஒரு கன்னியை யுகயுகாந்திரமாக நான் தேடிக்கொண்டிருந்தேன். குயிலின் இசையில், மயிலின் ஆட்டத்தில், நிலவின் ஒளியில் அவளைப் பார்க்க முடியாமல் தவித்தேன். வர்ண மேகங்களிலே, வான வில்லின் வளைவிலே—அந்த வடிவழகியைக் காணமுடியால் ஏங்கினேன். மலர்களின் சிரிப்பிலே, மந்தமாருதத்தின் குளிர்ச்சியிலே—அந்த மான் விழியாளைத் தேடித் தேடி அலுத்துப்போனேன். காவியத்தின் பொருளிலே, கவிதையின் அழகிலே, அந்தச் சுந்தரியின் அழகு முகத்தைக் காணமுடியாமல், பெருமூச்சுவிட்டேன்......எத்தனையோ அதிசய கனவுகள் கண்டேன், கடைசியில் எல்லாம் கனவாகவே முடிந்துவிட்டன. ஆனால் உன்னுடைய மதிமுகத்தையும் தேன் புன்னகையையும் கண்ட பிறகுதான், என் தவம் பலித்தது.

(51-ம் பக்கம் பார்க்க)

# எங்கள் பெரியார்

**தம்பி!**

ஆற்றலரசர்கள் காலம் முடிவுற்று, 'அரசன் மகன் அரசன்' என்ற நிலை பிறந்த பிறகு இருந்த ஒரு முடிதாங்கிக் காலத்துக் கதை கூறுகிறேன்—குடிஅரசுக் காலத்து நிகழ்ச்சிக்கு விளக்கம் காணப் பயன்படுகிறது.

காலையில் கண் விழித்த காவலன், அரண்மனை 'மாடி'யில் வந்து நின்றான். 'அரச பாட்டை'யில் ஒருவன் அரண்மனையை அண்ணாந்து பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்; அரசன் கண்களுக்கு வேறு விருந்து ஒன்றும் கிடைக்கவில்லை; சரி, என்று சலித்தபடி, பார்த்துவிட்டு உள்ளே சென்றான், செல்லும்போது, 'வாசற்படித் தூலத்தில்' தலை மோதிக்கொண்டது, இரத்தம் கசிந்தது.

அப்பப்பா! என்று அரசன் அலறினான்; களம் கண்ட காவலனல்லவே, வளை ஒடிந்ததாலும், பல் படிந்ததாலும் மட்டுமே ஏற்படும் வடுக்களைக் கண்டவன், எனவே, தலையில் அடி பட்டதும், துடியாய்த் துடித்தான. அரசனல்லவா? எனவே, அவனுடைய 'அப்பப்பா'வைக் கேட்டதும், ஆட்கள் ஓடோடி வந்தார்கள், மருத்துவர்கள் அழைக்கப்பட்டார்கள், அமைச்சருக்கு ஆள் அனுப்பப்பட்டது. அவனுடைய வேட்டைக்குச் சிக்கி, சேட்டைக்குப் பலியான மாதரசிகள் கூட, என்னமோ ஏதோ என்று பதைத்தனர்; கசிந்த குருதியைத் துடைத்தபடி காவலன், 'சனியன்! அவன் முகத்தில் விழித்தேன், உடனே இந்தப் பலன் ஏற்பட்டது!" என்று முணு முணுத்தான். அமைச்சர் கேட்டார், "அரசே! எந்தச் சனியன்? யார் முகத்தில் விழித்தீர்கள்? என்ன கூறுகிறீர்கள்?" என்று. அமைச்சர் அறிவார், அப்படி ஒன்றும் அவலட்சணங்கள் அரண்மனையில் கிடையாது என்பதை — அவலட்சணத்தை அணிபணி, பூச்சு ஆகியவற்றால் மறைத்திடும் திறமையுள்ளோரே மன்னனுக்கு மனோகரிகளாக இருந்தனர்.

"காலையில் எழுந்ததும் அமைச்சரே! மாடியில் நின்றேன், வீதியில் ஒரு சனியன் சென்றுகொண்டிருந்தான், அவன் முகத்தில்தான் விழிக்க நேரிட்டது. கணநேரத்தில் இந்தக் கதி நேரிட்டது" என்றான் மன்னன்.

"அப்படியா! அப்படிப்பட்ட 'சகுனத் தடை' ஏன் இராஜபாட்டையில், அதிகாலையில் நடமாட அனுமதித்தார்கள். மடையர்கள்! இனி மன்னா! காலையில், மங்கள ஆர்த்தியுடன் மாதர்கள், மலர்க்கூடைகள், பசு, இப்படிப்பட்ட 'தரிசனம்' தான் இருக்கவேண்டும், விடிந்ததும்—அதை இனி கவனித்துக் கொள்ளவேண்டியது என் பொறுப்பு" என்று ஆறுதலளித்தான் அமைச்சன்.

"எவ்வளவு மோசமான ஜென்மமாக இருக்கவேண்டும், அந்த மனிதன்; அவன் முகத்தில் விழித்ததும், இரத்த காயம் ஏற்பட்டதே! யார் அவன்?" என்று கேட்டான் மன்னன்.

"யாரடா அவன்?" என்று முழக்கமிட்டார் அமைச்சர், மெய்ப் பாதுகாப்பாளனை நோக்கி.


"ஏ! யார் அந்தச் சனியன்?" என்று போர்வீரனை நோக்கிக் கர்ஜித்தான் மெய்ப்பாதுகாப்பாளன்.

ஓடோடிச் சென்று 'இராஜபாட்டை'யின்கோடியில் அசைந்து சென்றுகொண்டிருந்தவனைப் பிடித்திழுத்து வந்தான் போர்வீரன். விசாரணை நடைபெற்றது — மன்னன் முன் அல்ல. தீர்ப்பு அளிக்கப்பட்டது, அமைச்சரால்.

"மன்னர்பிரானுக்கு மண்டையில் இரத்த காயம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த மாபாவியின் முகத்தில் மன்னன் அதிகாலையில் விழிக்க நேரிட்டது என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதால், இவன் ஓர் சகுனத் தடை என்பது தெளிவாகிவிட்டது. இத்தகையவன், அதிகாலையில் இராஜ பாட்டையில் நடந்து சென்று, அதன் பலனாக மன்னருக்கு இரத்தகாயம் ஏற்படக் காரணமாக இருந்ததால், இந்த மாபாவிக்கு மரண தண்டனை விதிக்கிறேன்'

மரண தண்டனை! என்று தீர்ப்புக் கூறப்பட்டதும், அவன் மருண்டு, காலில் விழுந்து உயிருக்கு மன்றாடவில்லை, மயக்கமுற்றுக் கீழே விழவில்லை, 'இடிஇடி' யெனச் சிரித்தான். அமைச்சர் குழுவுக்கு ஒரே ஆச்சரியம். இப்படியும் ஒரு பைத்யக்காரன் இருப்பானா? மரண தண்டனை விதித்திருக்கிறோம், பயல், சிரிக்கிறானே அதைக்கேட்டு. பித்தனோ! சித்துகள் தெரிந்தவனோ! என்று பலப்பல எண்ணினர்.

"ஏ, ஏமாளி! என்னடா சிரிக்கிறாய்? உனக்குத் தண்டனை விதித்திருக்கிறேன் —



தெரிகிறதா! வெட்டுப் பாறையில் உன் தலை துண்டிக்கப்படும், இன்று மாலை—புரிகிறதா?" என்று விளக்கமளிக்கும் விதத்தில் பேசினார் அமைச்சர்.

"புரிகிறது அமைச்சரே, நன்றாகப் புரிகிறது" என்று கூறிவிட்டு, அவன் மீண்டும் சிரித்தான்; சிரித்துவிட்டு, மன்னனுக்கு மண்டையில் அடிபட்டது, என் முகத்தில் விழித்த காரணத்தால், அப்படிப்பட்ட பொல்லாத முகம் எனக்கு, அமைச்சரே! அதுதானே எனக்கு மரணதண்டனை அளித்திடக் காரணம்? என்று கேட்டான்.

"ஆமாம், அற்பனே! அரசனுக்குப் படுகாயமல்லவா ஏற்பட்டுவிட்டது, உன்னுடைய பாழான முகத்தை அவர் பார்க்க நேரிட்டதால்" என்று அமைச்சர் 'விவேகம்' பேசினார்.

"விளங்குகிறது, அமைச்சரே! என் முகத்தின் இலட்சணம் இன்னது என்று விளங்குகிறது. என் முகத்தில் அதிகாலையில் மன்னன் விழித்ததால், அவருக்கு மண்டையில் இரத்த காயம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட 'சனியன் பிடித்த முகம்' எனக்கு. போகட்டும். என் முகமாவது இந்த மட்டோடு கெடுதல் விளைவித்தது — அந்த மன்னன் முகத்திலே நான் அதிகாலையில் விழித்தேன்—பலன் என்ன? உயிர் போகப்போகிறது. மரண தண்டனை கிடைக்கிறது. எவ்வளவு புண்யவானய்யா நமது பூபதி. எத்தகைய 'பாக்யம் அருளும்' முகமய்யா அவருக்கு, அதிகாலையில் 'இராஜ தரிசனம்' கிடைத்தால் உனக்கு நல்ல 'யோகம்' கிடைக்குமென்று ஒரு 'ஞானி சொன்னார்' அதனால்தான் அமைச்சரே, நான் அதிகாலையில், ஒருவர் முகத்திலும் விழிக்காமல், அரண்மனை எதிரே காத்துக் கொண்டிருந்தேன், இராஜ -தரிசனத்துக்காக; இராஜ தரிசனம் கிடைத்தது, மரண தண்டனையும் கிடைக்கிறது. மகா பாக்யவான், புண்யவான் நமது பூபதி. பார்த்தால் போதும், பிராணன் போகிறது. நான், சனியன், பீடை என்னைப் பார்த்தால் மன்னனுக்கு மண்டையில் அடிபட்டது—இரத்தம் கசிந்தது. அவருடைய முக தரிசனம் கண்ட எனக்கோ, மரண தண்டனை கிடைக்கிறது" என்று கூறிச் சிரித்தானாம்.

தம்பி, நாம் கூட இருப்பதால் மாற்றுக் குறைகிறது, ஆற்றல் குன்றுகிறது, வீரம் குன்றுகிறது, தூய்மை கெடுகிறது, ஏனெனில், நாம், சுயநலவாதிகள், வயிற்றுப் பிழைப்புக்காகவே பொது வாழ்வில் இருப்பவர்கள், சூதகர்கள், சூழ்ச்சிக்காரர்கள், நாம் ஒழிந்தால் மட்டுமே உண்மைக்கும் உயர்வுக்கும், தீரத்துக்கும், தியாகத்துக்கும், அதிதீவிர திட்டத்துக்கும், அபார வெற்றிகளுக்கும் வாய்ப்பு ஏற்படும், வயலில் களை போல், இருக்கிறோம், எனவே நாம் ஒழிந்தது மிகமிக நல்லதாகப் போய்விட்டது, இனி, தமிழகத்தில் இதற்கு முன் எப்போதும், எவரும் கண்டிராத கேட்டிராத, மகத்தான பலன்கள் கிடைக்கத் தக்க, மயிர்க்கூச்செறியும் போராட்டங்களும், மாபெரும் வெற்றிகளும் கிடைத்து விடும், பொறுக்கி எடுக்கப்பட்ட மணிகள், புடம்போட்ட தங்கக் கட்டிகள், கொள்கை தவிர வேறேதும் அறியாத கோமான்கள், கீறிய கோட்டினைத் தாண்டாத கடமை வீரர்கள், ஏன் என்று கேட்காத ஏந்தல்கள், எப்படி என்றுகூட எண்ணிடாத சுத்த வீரர்கள், இவர்கள் மட்டுமே இப்போது பாசறையில் இருக்கிறார்கள், என்றனர் பூரிப்புடன்.

நமது கூட்டுறவு கேடு பயப்பது, காட்டு வெள்ளத்தைக் கடந்து சென்றுகொண்டிருக்கும் வீரர்கட்கு நாம் வேண்டாத சுமையாக, கால்கட்டாக இருந்துவந்தோம், வெளியே ஓடிவிடுகிறோம், அதனால் இனி 'சொரி சிரங்கு' நீங்கிய உடலோன் போல, தி. க. 'தேஜோன்மயமாக' விளங்கப்போகிறது, தொட்டால் போதும் பட்டமரம் துளிர்க்கும், பார்வை பட்டால் போதும், பனையில் பலாச்சுளை தொங்கும், என்றெல்லாம் 'ஆரூடம்' பேசினர்.

தம்பி, இப்போது தி. க. 'பத்துப் பாட்டு' பாடுகிறது—அவர்கள் பத்து மாபெரும் காரியங்களில் ஈடுபட்டார்களாம், நாம் அவர்களுடன் சேரவில்லையாம் — பாவிகாள், இப்படி எங்களைக் கைவிட்டது நியாயமா? களத்திலே நாங்கள் இறங்கிக் கடும் போராட்டத்தில் ஈடுபட்டபோது, நீங்கள் கைகொடுத்தீர்களா? கன்னெஞ்சமென்பதா, கபடமென்பதா—என்னென்று புகல்வது உமது செய்கையை, அவனியோரே, அவனியோரே! இதோ பாரீர், பத்துக் குற்றச்சாட்டுகள், இந்தப் பாவிகள் செய்த பாதகச் செயல்கள்-என்று பட்டியல் கொடுக்கிறது தி. க. ஏன்? பத்துக் காரியங்களையும் துவக்கியபோது, தமது பாசறையில் போதுமான 'சரக்கு' இல்லை என்பதும், துவக்கிவிட்டு, ஒவ்வொன்றும் துவண்டுபோகக் கண்டு துடியாய்த் துடித்ததும், இப்போது மெள்ள மெள்ளத் தெரிகிறது என்றுதானே பொருள்.

நடிகவேள் இராதாவின் 'இழந்த காதல்' பார்த்திருக்கிறாயா தம்பி, நாம்தான் யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்றபடி, நம்மை நையாண்டி செய்தாலும், 'நம்ம இராதா' என்ற பாசத்தை விடாப் பிடியாகக்கொண்டவர்களாயிற்றே,

ஆகவே இராதாவின் நாடகத்தைக் காண்கிறோம், அடிக்கடி, 'இழந்தகாதல்' நாடகத்திலே ஒரு கட்டம்.

வெறிக்கக் குடித்துவிட்டு, தலைகால் தெரியாமல் ஆடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைவார் ஜெகதீஸ். பத்மா, 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று எண்ணும் பத்தினிப் பெண்! பயந்தபடி கணவனுக்குப் பணிவிடை புரிவாள். அந்தப் பணிவிடைகளிலே ஒன்று, ஜெகதீசுக்குச்சிகரட்கொடுத்து அதைப் பற்றவைப்பது. இராதாவின் நடிப்பு அபாரமாக இருக்கும் இந்தக் கட்டத்தில், ஆனால் தம்பி, அது ஒரு அரசியல் நிகழ்ச்சிக்கு விளக்கம் அளிக்க உதவும் என்று நான் அப்போது எண்ணியதே இல்லை!

'சிகரெட்' எடுத்துப்பத்மா, ஜெகதீசன் கரத்தில் கொடுப்பாள்—அவனுக்குக் கால் பூமியில் பாவாது, கரம் ஒரு நிலையில் நிற்காது, கண்களோ 'துறைமுகத்து' விளக்குப்போலச் சுற்றும் சுழலும், ஒளிவிடும், குறையும். வாய் திறப்பான், கண்ணை மூடிக்கொண்டு—சிகரெட்டை வாயில் திணிப்பாள்—உதட்டுக்கும் சிகரட்டுக்கும் சண்டை நடக்கும் — சிகரட் ஒருவாறு வெற்றிபெறும் — தீக்குச்சி எடுத்து சிகரெட் பற்றவைக்க பத்மா முயற்சிக்கவேண்டும்—ஒவ்வொரு தீக்குச்சியும் சிகரெட் அருகேசெல்லும்போது அணைந்து போகும். குடி போதை மிகுதியால் அவன் ஆடிக்கொண்டே இருப்பதும், மேஜைமீது இருக்கும் மின்சார விசிறிக் காற்று பலமாக இருப்பதும்தான் காரணம். அதைச் சொல்லக்கூடப் பயம்

பத்மாவுக்கு. பத்துத் தீக்குச்சிகள் அணைந்து போகும். ஜெகதீசனுக்குக் கோபம் வரும்.

ஏ, பத்மா! சிகரெட் பற்றவைக்கக்கூடத் தெரியவில்லையா........ கழுதே...என்று கூவுவான்—கண்ணீர் சிந்துவதைத் தடுக்க முயன்றபடி பத்மா, 'தீக்குச்சி அணைந்து அணைந்து போகிறது'' என்று கூறுவாள்.

"ஏனடி அணைகிறது?" என்று கேட்பான் ஜெகதீஸ்.

"விசிறி...காற்று......அதனல்" என்பாள், பத்மா.

ஒரு கேலிச் சிரிப்புடன், ஜெகதீஸ், அவள் கரத்திலிருந்து தீப்பெட்டியைப் பறித்துக்கொண்டு,

"விசிறினல் என்னடி, விசிறினல் என்ன? விசிறி இருக்கும்போது சிகரெட் பற்றவைக்கமுடியாதா? எவண்டி சொன்னது? இதோ பாரடி, நான் கொளுத்துகிறேன்—பாரடி இப்போ, விசிறி இருந்தால் தீக்குச்சி அணைந்துவிடுமாம்—எந்த 'இடியட்' சொன்ணுண்டி அப்படி? நான் பற்றவைக்கிறேன் பாரடி......இதோ பார்—நன்ருகக்காற்றடிக்கட்டும்—பலமாக அடிக்கட்டும் — இதோ பார்......" என்றுகூறுவான், தீக்குச்சி ஒவ்வொன்றும் அணைந்துகொண்டிருக்கும் — கொட்டகையில் சிரிப்பொலி கிளம்பும்—இதோ பார், கொளுத்திக் காட்டுகிறேன்—என்று மீண்டும் கூறியபடி, தீக்குச்சியைப் பாழாக்குவான், திடீரென்று, "ச்சீ! சனியனே! விசிறியை நிறுத்தேண்டி. அதான் விசிறிக் காத்தாலே தீக்குச்சி அணையுதே— பார்த்துக்கொண்டே சும்மா நிற்கிறியே, சனியனே!" என்று கூறிக் கூச்சலிடுவான், கொட்டகையில் கையொலி இடிமுழக்கம்போலாகும்.

தம்பி! விசிறிக் காற்று இருக்கும்போது, தீக்குச்சி கொண்டு சிகரட் பற்றவைக்கமுடியவில்லை என்று பத்மா சொன்னபோதும் கோபிக்கிருன்; காற்று இருந்தால் என்ன, நான் பற்றவைத்துக் காட்டுகிறேன் பார் என்று 'சவால்' விடுகிருன், செய்யமுடியாமல் போனதும், கோபம் கொப்பளித்துக்கொண்டு வருகிறது, விசிறியை ஏன் நிறுத்தக்கூடாது என்று கேட்டுப் பத்மாவை ஏசுகிருன். பரிதாபத்துக்குரிய பத்மாவுக்கு எதைச் செய்யும்போதும், எதைச் செய்யாமலிருக்கும்போதும் திட்டு, தட்டுதான்—இழந்தகாதல் நாடகத்தில்.

நாம் 'பத்மா'வாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறது தி.க. தம்பி, தம்பி, அந்தமட்டும்தான் உவமை — அதை முழு அளவுக்கு நீட்டிச் சென்று, -ஓஹோ! எங்களைக் குடிகாரன் என்ருகண்டிக்கிருய், உன் தலையில் இடி விழ, இல்லையானல் சாப்பாட்டு இலையில் ஈயாவது விழ," என்று 'சாபம்' கொடுத்துவிடப் போகிருர்கள்—என் நோக்கம், 'பத்மா'போல பரிதாபத்துக்குரிய நிலையில் நாம் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் சிலர் இருக்கிருர்கள் என்று எடுத்துக் காட்டுவதுதான்.

பத்துப் போர்களில் நாம் கலந்து கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டுகிருர்களே, இன்று, அன்று நாம், யோசனைகூற அனுமதிக்கப் பட்டோமா, கலந்து பேசி, ஏதாவது ஒரு திட்டம் திட்டப்பட்டதா? அவர்கள் அழைத்து, நாம் நிராகரித்தோமா?

ஏ! அப்பா! இவ்வளவு பயங்கரமான போரில் ஈடுபட எம்மால் முடியுமா? இதற்குத் தேவைப்படும் வீரம் தீரம், தியாகம், எம்மிடம் ஏது என்று கூறிவிட்டா, கைகட்டி வாய்பொத்தி நின்ருேம். இல்லை. ஒவ்வொரு 'போர்'ப் பிரகடனம் வெளியிடப்பட்ட நேரத்திலும், நோக்கம், முறை, அமைப்பு எனும் மூன்றுவிஷயங்கள் குறித்த விளக்கமும், கலந்து பணியாற்றும் அழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவண்ணம் இருந்துவந்தோம் —நம்மில் சிலர் ஏங்கிக்கிடந்ததுமுண்டு. 'போர்' அறிவிக்கப்பட்டபோது, 'இதுகளை' ஒருகட்சிஎன்று மதித்து, அழைப்புவேறு அனுப்ப வேண்டுமா! கால்தூசு! அறுந்துபோன செருப்புகள்! ப்யூஸ்போன பல்புகள்! போக்கிடமத்ததுகள்! என்றெல்லாம் சாக்கடை மொழியில் ஏசிவிட்டு, பத்தும் விதவைக்கு வேலி ஓரத்தில் அழுகிக்கிடப்பதுபோலான பிறகு, பத்துப் போரிலும் ஈடுபடாத பாவிகள், பழிகாரர்கள் என்று தூற்றுவதா! இதென்ன நியாயம்? எவர் ஏற்பர் இதனை?

தி. க.வின் போர்த் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றித் தரும் வேலையை, நாமாக, வலியச் சென்று, வகையையே விருந்தாகக் கருதி மேற்கொள்ள வேண்டுமாம், தம்பி, மன்னன் ஆயிரம் மடங்குமேல் என்பேன். அவனுக்காவது, மண்டையில் அடிபட்டது, நாமோ, நம்மால் இவர்களுக்குக்கிடைக்க இருக்கும் மாபெரும் வெற்றி கெடலாமா, நாம் ஒதுங்கிக்கொள்வோம், நம் கூட்டுறவு இல்லாவிட்டால்தான், இவர்கள் எதிரிகளின் கோட்டைகளைத் தூளாக்குவர், கொடிமரத்தை வெட்டி வீழ்த்துவர், என்று கருதினேம் — பாதை திறந்து இருந்தது, எனினும் இப்போது, வெற்றி கிட்டாததால் ஏற்பட்ட வேதனை கோபத்தைக் கிளப்பிவிட, நாங்கள் துவக்கிய 'பத்து' கிளர்ச்சிகளிலே இவர்கள் ஈடுபடவில்லை என்று குற்றம் சாட்டுகிருேம், என்று பட்டியல் வெளியிடுகிருர்கள். இதைப் போன்ற வேடிக்கை—நான் துவக்கத்தில் சொன்ன கதை, இழந்த காதல் நாடகம் இரண்டிலுமே கூடக் கிடைக்காது.

தி. க.வின் 'பத்து' அவர்களாகத் தேடிக்கொண்ட சொத்து. நமக்கு அதிலே பங்கு கிடையாது—கேட்க நமக்கு உரிமையும் கிடையாது—வெற்றி தோல்விக்கு தி. க. தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்—பிறர்மீது, உதவிசெய்யவில்லை என்று பழி சுமத்துவது, தோல்வியை மூடி மறைக்கக்கூட உதவாது.

**எந்த முற்போக்கான கட்சியும், நாம் மேற்கொண்டுள்ள மூலாதாரக் கொள்கைக்கு ஊறு நேரிடாத வகையிலும், நமது கழகத் தன்மானத்துக்குக் கேடு சூழாத வகையிலும், எந்தப் போராட்டம் துவக்கி, அதிலே கலந்து பேசி காரியமாற்ற அழைத்தாலும், நாம் தயாராக இருக்கிருேம் என்பதை அடிக்கடி அறிவித்திருக்கிருேம்—இப்போதும் அறிவிக்கிருேம்.**

**எங்களால் முடியாவிட்டால்தானே, பிறரை அழைக்க — என்று வாதாடுவோருக்கு, நாம் மதிப்பளிக்கிருேம் —அவர்கள் பேச்சுக்கேற்ப வெற்றியும் பெற்ருல், அவர்கட்கு வாழ்த்தும் வணக்கமும் கூறுகிருேம்.**

**இவர்களை மதித்து நாங்கள் அழைக்க வேண்டுமா?என்று கேட்பரேல், அரசியல் நாகரிகம் அல்ல அது என்று பணிவுடன் எடுத்துக் கூறுவோம்.**

**அழைப்பானேன்,.தாமாக வந்து கலந்து கொள்வதுதானே! என்று வாதாடுவரேல், தன்மானத்துக்கு அது**

அழகுமல்ல, தானுகத் தாவிக் குதித்து நாங்கள் போட்டிருந்த திட்டத்தை நாசமாக்கிவிட்டார்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஒரு சமயம் ஆளாகவேண்டி வரும் என்பதை எடுத்துக் கூறுகிறேம்.

ஒருவர் தயவை; கூட்டுறவை, ஒத்துழைப்பை எதிர்பாராமலேயே, நாங்களே நடத்தி, நாங்களே பெற்ற வெற்றி காணீர், இதிலே எவனும் பங்கு கேட்கக்கூடாது என்று கூறுவரேல், வேண்டாம் ஐயனே! முழுக் கீர்த்தியும் உமக்கே இருக்கட்டும், எமக்குப் பங்கு ஒரு துளியும் தரவேண்டாம் என்று கூறுகிறேம்.

ஆனுல்,

போர் நோக்கம், முறை, அதற்கான அமைப்பு யாவும் எங்கள் இஷ்டம்போல் தான் இருக்கும்,

யாரையும் கலந்து பேசமாட்டோம்,
எவரையும் அழைக்கமாட்டோம்,
நாங்களே நடத்துவோம்,

மற்றவர்கள் தாமாக வராவிட்டால், பிறகு அவர்களைப் பலமாகக் கண்டிப்போம், சாபம் கொடுப்போம்,

என்று ஒரு அரசியல் கட்சி கூறுகிறது என்ருல், நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் நமக்கென்ன என்று இருந்துவிடுவதன் விளைவு இந்த விபரீதப் போக்கு என்று கூறுவதன்றி வேறென்ன தம்பி கூறமுடியும்?

எனினும், ஒரு விதத்திலே எனக்கு அந்தப் 'பத்து' பார்க்கும் போது அலாதியான மகிழ்ச்சி. பத்து வெற்றிகளைக் காட்டி, வீணர்காள்! நீங்களெல்லாம் பந்தாடிக்கொண்டும், பந்தியில் சுவைத்துக்கொண்டும் இருந்தீர்கள், நாங்கள் பள்ளமென்றும் மேடென்றும் பாராமல், பகலென்றும் இரவென்றும் கவனியாமல், எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற எழுச்சியுடன், களத்திலே காற்றெனச் சுற்றிக் கடும் போரிட்டுப் பெற்ருேம் பத்து வெற்றிகள், காணீர்! காணீர்! என்று கூறவில்லை. நாங்கள் பத்து விதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டோம், அவைகளில் இவர்கள் சேரவில்லை என்று கூறுகிருர்கள்; கூறுவதன்மூலம் இவர்கள் சேராததால் நாங்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தோம், வெற்றி கிட்டவில்லை என்று ஒப்புக்கொள்வதாகத்தான் பொருள்! வேறென்ன?

வஞ்சகி! கன்னெஞ்சக்காரி! ஏறெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டாள்—என்ருன் ஏமாந்த காதலன். நண்பன் கேட்டான், அவளுடைய காதலைப் பெற நீ எடுத்துக் கொண்ட முயற்சி என்ன என்று. நானு?

கல் வீசினேன்
காட்டேரி! மூளி! என்று ஏசினேன்
அவள் பாதையில் படுகுழி வெட்டினேன்
அவள் தோட்டத்து மலரை அழித்திட மந்திரியை ஏவினேன்

இவ்வளவுசெய்தும் அவள் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். என்னென்பது அவளுடைய கன்னெஞ்சத்தை. காதகி! பாதகி! அவளைக் கண்டிக்க, ஊராரே! உலகோரே! ஒன்றுகூடுமின், உடனே எழுமின்! என்று கூறினுல் எப்படி இருக்கும்!

தி. க. நாம், 'பத்து' கிளர்ச்சிகளிலே ஈடுபடவில்லை என்று எடுத்துக்கூறி, உலகம் தன்னிடம் அதற்காகப் பரிதாபம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கிறது.

**அவர்களை அழைத்தீர்களா?**

**இல்லை!**

**அவர்கள் கருத்தறிந்து போர் வகுத்தீர்களா?**

**இல்லை!**

**அவர்களிடம் ஒரு துளி அன்பு காட்டினீர்களா?**

**இல்லை!**

**அவர்களை இழித்தும் பழித்துமாவது பேசாதிருந்தீர்களா?**

**நாள் தவருமல் ஏசி வந்தோம்.**

இப்படி 'வாதாடுகிறது' நாம் நமது உழைப்பைக் கொட்டி ஆக்கி வைத்த தி. க.

பத்மாதான் ஜெகதீசுக்கு வாழ்க்கைப்பட்டாள்—எனவே வதைபட்டாள்.

மரண தண்டனை பெற்றவன் மன்னன் ஆட்சியில் ஓர் குடிமகன், எனவே, அவன் அக்ரமத் தீர்ப்புக்கு ஆளாக நேரிட்டது.

மற்றவர்களுக்கு என்ன வந்தது? ஏன் அவர்கள் அத்தகைய நிலைமைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளப்போகிருர்கள்?

நாம் விலகி வந்தவர்கள் — அவர்களும் நாம் விலகியான பிறகு நம்மை விரட்டிவிட்டதாகத் தெரிவித்துவிட்டார்கள்.

நாம், வாழ்க்கைப்பட்டும் இல்லை, அந்த ஆட்சியில் குடிமக்களாகவும் இல்லை.

நமக்கென்று ஓர் குடும்பம், ஓர் கொற்றம் அமைத்துக்கொண்டாகிவிட்டது.

எளிய குடும்பமாக இருக்கலாம் —ஏழெட்டு இலட்சம் இல்லாமலிருக்கலாம்.

குறுநிலக் கொற்றமாக இருக்கலாம், குவலயத்தில் கீர்த்தி சாமான்யமானதாக இருக்கலாம்.

அளவும் தரமும் எப்படி இருப்பினும், நாம் அந்தக் குடும்பத்துக் கட்டளைக்கோ, கொற்றத்துத் தீர்ப்புக்கோ அடங்கித் தீரவேண்டும் என்று பேசுவது எப்படி நியாயமாகும்?

பத்மாபோல, அடுத்த வீட்டு அம்புஜமும் எதிர்வீட்டு ஏமலதாவும், ஜெகதீசுக்கு அடங்கிக்கிடக்கவும், ஆட்டி வைக்கிறபடி ஆடவும் வேண்டும் என்று நாடகத்திலும் கூருர்களே!

அதுபோலவே தி. க.வில் உள்ளவர்கள், பத்தோ பதினைந்தோ, தேவையோ அல்லவோ, தலைமை தரும் போர்த் திட்டங்களைத் தாங்கித் தமது பத்தினித்தனத்தையும் குரு பக்தியையும் காட்டித் தீரவேண்டியதுதான் முறை. நம்மை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? ஏன் அந்த நினைப்பு வரவேண்டும்? அதிலே தான் தம்பி சூட்சமம் இருக்கிறது! அவர்கள் எவ்வளவுதான் நம்மை ஏசினுலும், ஏளனம் செய்தாலும், நமது வளர்ச்சியும் கட்டுப்பாட்டு உணர்ச்சியும், அவர்களையும் அறியாமல் நம்பால் ஈர்க்கிறது — ஈர்த்ததும், ஆஹா! இவர்கள் மட்டும் நாம் சொல்கிறபடி ஆடினுல்........ என்று எண்ணம் பிறக்கிறது! அவ்வளவுதான்!

அவர்களின் ஆசைக்காக பத்து அல்ல இருபது போர் எனினும், நாம் ஈடுபடக்கூட முயற்சிக்கலாம். ஆனுல், எந்த நேரத்தில், எந்த வகையில் போர் அமையும், நோக்கம் எதுவாக இருக்கும். முறை எப்படி இருக்கும், போர் எந்தெந்தக் கட்டம் செல்லும், எப்போது நின்றுபோகும், ஆகிய எது நமக்கோ, நாட்டுக்கோ புரிகிறது, தெரிகிறது சொல்லேன், கேட்போம்.

மிகப் பிரமாதமாக தி.க. சேனாதிபதி இன்று பேசுவது பார்ப்பனர்களை நாங்கள் ஒழித்துக்கட்ட, நாட்டைவிட்டு விரட்டப் போர்த் திட்டம் வகுத்துவிட்டோம், இவர்களோ, 'ஈயம்' பேசுகிறார்கள் —ஓட்டப்பட வேண்டியது, ஒழிக்கப்பட வேண்டியது, பார்ப்பனர்கள்— பார்ப்பனீயம் என்று பேசுவது, கோழைத்தனம். பார்ப்பனர்கள்—கள்! அதுதான் எமக்குப் போர்த் திட்டம்— பார்ப்பனீயம்—ஈயம் அல்ல! என்று பேசுகிறார்.

'ஈயம்' ஒழிக்கப்பட்டால் போதும் என்பது கோழைத்தனம், துரோகம், காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம், இனத்துரோகம், என்றெல்லாம் குத்துகிறார்.

நாம், பார்ப்பனீயம் ஒழிக்கப்பட்டால் போதும் என்று கூறுவது பற்றி, பார்ப்பனர்களையே ஒழிக்க 'ஜல்லடம்' கட்டிக்கொண்டுள்ளவர்கள் ஏன் கவலைப்படவேண்டும்? ஒழித்துக்கட்டுவதுதானே, யார் குறுக்கே படுத்துக்கொண்டு தடுக்கிறார்கள்? தடுத்தால்மட்டும் இவர்களுடைய படைபலம் கொண்டு, கண்ட துண்டமாக்கிவிட்டு மேலால் வெற்றிக்கொடி பிடித்துக்கொண்டு செல்லலாமே! ஏன் தயக்கம்? எது தடுக்கிறது? பலம் இல்லையா? அல்லது காலம் சரியில்லையா?

பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட வேண்டும்—அதற்காக இதோ திட்டம், போர் துவக்கம் இன்னநாளில், படைத்தளபதிகள் இன்னின்னார், களம் இன்னின்ன இடத்தில், என்று அறிவித்துவிட்டு, 'ஜாம் ஜாமென்று' நடத்தவேண்டியது தானே! காலமெல்லாம் சொல்லிக்கொண்டே இருப்பதுதானா! இதற்கு, 'நாம்' வேறு எதற்கு? அவர்களே போதுமே! நாளைக்கொரு தடவை குத்துவது, குடைவது—களிப்படைவது – இதுதான் 'போர்' என்றால்,இதற்கு நாம் ஏன்?

உண்மை என்ன தெரியுமா தம்பி! பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டும்என்பது 'தீவிரத்திட்டம், புரட்சிகரமான திட்டம், பார்ப்பனீயத்தை ஒழிக்கவேண்டும் என்பது சொத்தைத் திட்டம், என்று பேசி அதனைச் சாக்காகக்கொண்டு நம்மை ஏசலாம். இது ஒரு நோக்கம். 'மற்றொன்று, பார்ப்பனர்களை ஒழிக்கவேண்டும் அக்ரகாரத்தைக் கொளுத்த வேண்டும் என்று அவர்கள் வீரதீரமாகப் போர் முழக்கம் செய்வார்கள்—அதற்காக அவர்களுக்கு அடிபணிந்துவிட்டு நாம், பார்ப்பனர்கள் மீது பாய வேண்டும்—படவேண்டிய கஷ்டம் படவேண்டும் — பிறகு அவர்கள் பரிகாசம் பேசவும், பாவிகள் பலாத்காரத்தை அல்லவா தூண்டிவிட்டார்கள், பார்ப்பனர்களை ஒழிக்கவேண்டும் என்று சொன்னதன் தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவே இல்லையே, கெடுத்தேவிட்டார்களே, என்று பழி சுமத்தலாம். இது மற்றோர் நோக்கம்.

பார்ப்பனர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று புரட்சி பேசுவது —பயங்கரமான சூழ்நிலை உருவாவதாகச் சித்தரிக்க வேண்டியது— தகுந்த சமயமாகப் பார்த்துக் காமராஜர் குறுக்கிட்டு இதெல்லாம் வேண்டாம் என்பார், உங்கள் வார்த்தைக்காக வாளைஉறையிலே போடுகிறேன் என்று கூறி, அவருக்கு நேருவிடம் நல்ல பெயர் வாங்கித் தருவது, இது மற்றோர் நோக்கம்.

இப்படி ஏதேனும் ஓர் நோக்கம் இல்லை என்றால், ஏன், பார்ப்பன ஒழிப்புப்பற்றி இன்னமும் பேச்சுக்கடை மட்டுமே இருக்க வேண்டும். செயலுக்கு என்ன தடை? வீரதீரமாக நீங்கள் கிளம்பி, வெட்டிக் குவித்தோ, விரட்டி அடித்தோ பார்ப்பனர்களை ஒழித்துக்கட்டத் தொடங்கிவிட்டால், இருந்த இடம் தெரியாமல், ஈயம் பேசுவோர் ஓடிவிடுகிறார்கள்! "ஈயம்" பேசுகிறார்களே, ஈயம் பேசுகிறார்களே என்று எத்தனை நாளைக்குச் சாக்குக் கூறித் தப்பித்துக்கொள்வது?

இந்த இலட்சணத்தில் இருக்கிறது திட்டம், இதிலே நாம் சேராதது குறித்து குற்றம் சாட்டுகிறார்களாம்!

இதிலாவது, எத்தனை நாட்களுக்கு, ஒரேவிதமான, நிலையான கருத்து இருக்கும் என்று யார் கூறமுடியும்? இன்று, பார்ப்பனர்களை ஒழித்தாக வேண்டும் என்று பேசும் தி. க.வில் தம்பி, நீயும் நானும் இருந்தபோது, வெறும் கொடிதூக்கியாகவோ; கும்பி நிரப்பிக்கொண்டோ அல்ல, "பெட்டிச் சாவியைக் கொடுக்க ஒரு தனி மாநாடு போடுகிறேன்" என்று பெரியார் திராவிடத்துக்கு அறிவித்திடும் அளவுக்கு, குறிப்பிடத்தக்க 'இடம்' பெற்று இருந்தபோது, பார்ப்பனீயம் ஒழிக்கப்படவேண்டும் என்பதுதான் திட்டம், பார்ப்பனர்களை ஒழிப்பது என்பது அல்ல! இன்றைய தி. க.வுக்கு எது 'ஈயம்' என்று ஏளனமாகப்படுகிறதோ, அதுதான், நாம் அங்கு இருந்தபோது, திட்டம். அதற்கு நாம் கட்டுப்பட்டவர்களே தவிர, அதற்குப் பிறகு, காரணம் காட்டப்படாமலும், நமது கருத்து அறியாமலும், அவர்களாக ஒரு திட்டம்-தீவிரமானதாக, தீ பறப்பதாக, கேட்போர் திடுக்கிடக்கூடியதாக இருக்கட்டும் என்பதற்காகத் தீட்டிக்கொண்டால், அதற்கு நாம் கட்டுப்பட்டவர்களா? அதன் முழுப் பொறுப்பும் இன்றைய தி. க. வுடையது. அதன் வெற்றிக்கு முழுமூச்சுடன் — பிறரை ஏசாமல்— வேறு யாரும் துணைக்கு வரவில்லையே என்பதுபற்றிப் பொருட்படுத்தாமல்— பழி கூறாமல்—துவக்கி வெற்றி காண்பதுதான் முறை. அதை விட்டுவிட்டு இங்கே திரும்பிப் பார்ப்பது ஏன்?

தி. க.வின் நினைப்புக்கும் நிலைக்கும் நாமும் பொறுப்பாளிகளாக இருந்த வரையில், பார்ப்பனீய ஒழிப்புத்தான் திட்டம்-நாம் இன்றும் அதைத்தான் திட்டமாகக் கொள்கிறோம். அது போதாது என்றால், இன்றைய தி. க. அதிதீவிரத் திட்டத்துக்குப் பயணமாகட்டும்,நாமொன்றும் சுங்கச்சாவடி வைத்தில்லையே!

நாமறிந்த தி. க; மட்டுமல்ல, நாம் வெளியேறிய பிறகும், 1953ல்கூட, தி. க.வின் திட்டம், பார்ப்பனீய ஒழிப்பே தவிர, பார்ப்பனர்களை ஒழிப்பது அல்ல. தம்பி! இதோ கேள், பெரியாரின் பேரன்பர் ஒருவர் பேசுகிறார்.

முகப்பில்......

அணுசக்தி இன்றுஉலகறிந்த இரகசியம்! அப்படிப்பட்ட அணுசக்தியைக் கண்டு பிடிப்பதற்கு அவசியமான 'ரேடியோ ஆக்டிவிடி' எனும் விஞ்ஞான உண்மையைக் கண்டளித்தவர், ஜூலியட் க்யூரி எனும் இந்த அம்மையார். உலகப்புகழ் பெற்றவரும் 'ரேடியம்' கண்டு பிடித்தவருமான மேடம் க்யூரியின் மகள், இவர். தாயைப் போலவே, தானும் விஞ்ஞானத் துறையில், சிறந்து விளங்கினார் இவர். தன்னுடைய தாயின் ஆய்வுச் சாலையில் பணிபுரிந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். கணவனுக்கும் மனைவிக்கும் அவர்களது அரிய கண்டுபிடிப்புக்காக 'நோபல்' பரிசும் வழங்கப்பட்டது.

இப்படிப்பட்ட மேதை கடந்த 16ந்தேதி இரவு பாரிசில், காலமாகி விட்டார்.

பிரான்சில் பிறந்தாலும்,உலக முழுவதும் பெயர் பெற்று விளங்கும் பெரிய விஞ்ஞானிகளுள் இவரும் ஒருவர். விஞ்ஞான உலகம், க்யூரி பரம்பரையை என்றும் மறக்காது.

"தமிழ் தாத்தா அவர்களே! தமிழ் நாடு தனியாகப் பிரிந்தால், திராவிட கழகத்தாரின் கை ஓங்கி, திராவிட கழகம் பலமிக்கதாகி, பிராமண சமூகத்தைத் திராவிட கழகத்தார் ஒழித்துவிடுவார்கள் என்று சில பிராமணர்கள் பயப்படுகிறார்கள். இந்தத் தவறான எண்ணத்தைப் போக்கவே, பெரியார் அவர்களை இங்கு பேசுவதற்கு அழைத்தோம்."

பேசுபவர், தம்பி! ஆர். சீனுவாசராகவன் எனும் **பார்ப்பனர்!**

*மூன்று வேடிக்கைகள் இதிலே காணலாம்.*

*பெரியார் இதில் தமிழ் தாத்தா—திராவிடத் தந்தை அல்ல!*

*பிராமணர்கள்என்றுதான்வார்த்தை பார்ப்பனர் என்ற வார்த்தைகூட உச்சரிக்கப்படவில்லை.*

இவ்வளவும், 6—1—53 விடுதலையில் உள்ளது.

எப்போதும் விடுதலையில் பார்ப்பனர் பற்றி எழுதப்படும்போது பார்ப்பனர் என்றுதான் வார்த்தை இருக்கும். இந்த 6—1—53 பேச்சு மட்டும் விடுதலையில் பார்ப்பனர் என்ற பதமே இராது — பிராமணர் என்றுதான் பதப்பிரயோகம் இருக்கும்—அவ்வளவு பவ்வியம் — அவ்வளவு நாகரீகம் — தேவைப்பட்டது. காரணம் பேசிய இடம் மைலாப்பூர், இலட்சுமிபுரம் யுவர் சங்கம்!

பெரியாரிடம் பவ்வியமாகப் பேசி, யாரோ பார்ப்பனர் ஏமாற்றுகிறார் என்று தோன்றும். தம்பி, பெரியார் பேச்சை நம்பவேண்டுமல்லவா? சரி! 8—1—53 விடுதலையைப் பார் புரியும்.

"எனக்கு முன் பேசிய நண்பர்ஸ்ரீனிவாசராகவன் அவர்கள் பேசும்போது ஒரு விஷயம் குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் ஏதாவது சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

அதாவது யாரோ சில பிராமணர்கள் அவரை, பெரியார் இராமசாமி நாயக்கர், பிராமணர்கள் இந்த நாட்டில் வாழவே கூடாது என்று பேசி வருகிறார். அவரை நீங்கள் எப்படி இங்கே கூப்பிட்டீர்கள் என்பதாகக் கேட்டார்கள்" என்று சொன்னார். **பிராமணர்கள் இந்த நாட்டில் வாழக் கூடாது என்றோ, இருக்கக் கூடாது என்றோ திராவிடக் கழகம் வேலை செய்யவில்லை. திராவிட கழகத்தின் திட்டமும் அதுவல்ல.** திராவிட கழகத்தினுடைய திட்டமெல்லாம், திராவிட கழகமும் நானும் சொல்லுவது எல்லாம் நாங்களும் கொஞ்சம் வாழ வேண்டும் என்பதுதான்.

இந்தநாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத் தன்மையோடு, சமத்துவமாக இருக்க வேண்டும் என்பதுதான். இது பிராமணர்களை வாழக்கூடாது என்று சொன்னதாகவோ, இந்த நாட்டைவிட்டு அவர்கள் போய்விட வேண்டுமென்று சொன்னதாகவோ அர்த்தமாகாது. **அவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை, அது ஆகிற காரியம் என்று நான் கருதவுமில்லை. தவிரவும் பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம்ஒன்றும் இல்லை.** அவர்கள் அனுசரிக்கும் சில பழக்க வழக்கங்களையும் முறைகளையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம்! இது அவர்கள் மனம் வைத்தால் மாற்றிக் கொள்வது பிரமாதமான காரியம் அல்ல. நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம்? ஒருகுழாயிலே தண்ணீர் பிடிக்கிறோம். ஒரு தெருவிலே நடக்கிறோம்; ஒரு தொழிலேயே இருவரும் செய்கிறோம். காலமும் பெருத்த மாறுதல் அடைந்துவிட்டது. மக்களும் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து விட்டார்கள். விஞ்ஞானம் பெருக்கம் அடைந்துவிட்டது. இந்த நிலையில் நமக்குள் மனிதத் தர்மத்தில் பேதம் இருப்பானேன்? ஆகவே, உள்ள பேதங்கள் மாறி நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும், சகோதர உரிமையுடனும் இருக்கவேண்டும் என்பதற்கு ஆகத்தான் பாடுபடுகிறேன். நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக்கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. **எனது முயற்சியில் பலாத்காரம் சிறிதும் இருக்கக் கூடாது என்பதிலும் எனக்குக் கவலை உண்டு"**

தம்பி! 1953ல்,

**பிராமணர்களை ஓட்டச் சொல்லவில்லை**

**அது ஆகிற காரியமுமல்ல**

**பிராமணர்களுக்கும் நமக்கும் என்ன பிரமாதமான பேதம்?**

**என் முயற்சியில் பலாத்காரம் இருக்காது**

என்று பெரியார் பேசுகிறார் — அது 'ஈயம்' என்று ஏளனப் பொருளாகிறது. 1953ல் இந்தக் கருத்து பொருளும் பொருத்தமும் உள்ளது என்றால், திடீரென்று, பார்ப்பனியம் ஒழிக்கப்பட்டால் போதாது, பார்ப்பனர்கள் ஒழிக்கப்பட்டாகவேண்டும் என்று தாவுவதற்கு என்ன காரணம்?

பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றுமில்லையென்று 1953ல் கூறிவிட்டு' 54, 55ல் அக்ரகாரத்தைக் கொளுத்தவும், பார்ப்பனர்களை விரட்டவும் வேண்டும் என்று கூறவேண்டிய விதமாக, பார்ப்பனர்களிடம் திடீரென்று அடக்கமுடியாத ஆத்திரம், போக்க முடியாத பகை ஏற்படக் காரணம் என்ன? தி. க. வினர் கூறுவரா? எண்ணிப் பார்த்தால்தானே கூற!

1953ல்மட்டும்தானா அப்படி! இப்போதும் நான், தம்பி, கண்ணாரக் கண்டேன் — பெரியார், பார்ப்பனத் தலைவர்களிடம் எவ்வளவு விசுவாசமாக நடந்து கொள்கிறார் என்பதை. எவ்வளவு சாந்தமாய், சமரசமாய், பேசுகிறார் என்பதையும் காதாரக் கேட்டேன்.

நாம் 'ஈயம்' பேசுகிறோம் என்று கூறுவதெல்லாம், அதுதான் நடக்கக்கூடிய, நாணயமான நாகரீக முறை; அதை, நாம் கையாள்கிறோம் என்பதால் வந்த எறிச்சலாலேயே தவிர, தி. க. பார்ப்பனர்களை ஒழித்துக் கட்டக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருப்பதாக, யாரும் எண்ணமாட்டார்கள். அப்படி உண்மையிலேயே ஒரு தீவிரமான புரட்சித் திட்டம் இருந்தால், நீயும் நானும் தம்பி! தடுக்கவா போகிறோம்! நடத்தட்டும்! நாடுமட்டுமல்ல, உலகே உண்மையில் "கிடுகிடுக்கும்"

நாம், தம்பி! பார்ப்பனீய ஒழிப்புத் திட்டம் தந்த பெரியாரின் பாதையில் செல்வோம்—அதிலே தவறுமில்லை – துரோகமுமில்லை. ஈயம்...ஈயம்...... என்று ஏளனம் கூறுவோர் கூறட்டும்......நாம் கூறுகிறோம், ஈயம் தந்தார் எங்கள் பெரியார்......அது ஏளனத்துக்கு உரியது என்று நாங்கள் எப்படிக் கருதமுடியும், உங்களிடம் உள்ள பெரியார் வேறு விதமான திட்டம் தந்ததாக நீங்கள் கூறுகிறீர்கள்—பொது மேடைகளில்—தனியாகப் பேசும்போதோ. பெரியாரை நான் அந்த இடத்துக்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டேன் என்று எக்காளமிடுகிறாராம் ஒரு இடம் பிடித்தான்—எப்படி இருப்பினும், அதை அவர்கள் நம்பட்டும், நம்பினால் நடத்தட்டுமே. அதற்கு நமது உதவியை ஏன் எதிர்பார்க்கவேண்டும்? கிடைக்காதது கண்டு, பத்துக் கிளர்ச்சியிலும் சேரவில்லையேஎன்று எதற்காகப் பதைக்கவேண்டும்?

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# ஊரார் உரையாடல்

**ஒற்றன்**

**கண்ட்ராக்டர் கண்ணுயிரம்:-** என்னய்யா காமராஜர் ஆமை, ஊமை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள், ஆசாமி இப்போது புலிபோலப் பாய்கிருர், சிங்கம் போலக் கர்ஜிக்கிருர், கூட்டணியைத்தாக்கு தாக்கென்று தாக்கிக் கொண்டு இருக்கிருரே!

**கத்திரி:-** அவருடைய வீர தீரம் மட்டுந்தாஞ அதிலே இருந்து தெரிகிறது? கூட்டணி ரொம்பக் காரசாரமாக இருக்கிறது என்பதும் தெரிகிறதல்லவா. எதற்குமே அசைந்து கொடுக்காத மன்னன், இந்தக் கூட்டணி கண்டதும் மூலேக்கு மூலே ஒடி முழக்கமிடுகிருர்.

**கண்:-** போய்யா, நீ எப்பவும் இப்படித்தான், குதர்க்கம்......கூட்டணியில் சேர்ந்திருப்பவர்கள் அவர் சொல்வதுபோல ஒத்துப் போகக்கூடியவர்களா? கொள்கையில், திட்டத்தில், ஒருவருக்கொருவர் மாறுபட்டவர்கள்.

**கத்திரி:-** ஆமாம்...அதனுல்தான் கூட்டணி என்கிருர்கள். ஒரே விதமான கொள்கை இருந்தால், ஒரே கட்சியாகஅல்லவா காட்சி அளிப்பார்கள். கதம்பமாலே என்ருல் அதிலே பலவிதமான மலரும்தானே இருக்கும்! ஐயயே! இதென்ன, மருவு, மருக்கொழுந்து, முல்லே, சாமந்தி, மல்லி, இருவாட்சி இப்படி பல மாதிரிப் பூவைத்து மாலேகட்டி இருக்கிருர்களே என்று கூறிக் கேலி செய்வது, புத்திசாலித்தனமா?

**க:-** அட, போய்யா ... கூட்டணி உடைந்துபோகும் என்கிருர்.

**கத்திரி:-** அடே அப்பா! இதற்கு பெரிய பாரத் பூஷண் பட்டம் கிடைக்கவேண்டுமா! எடுத்துக் கொண்ட வேலே முடிந்ததும் கூட்டணிக்கு அவசியம் இருக்காது, இது கீரை விற்கும் கிழவிக்கும் தெரியுமே ... வேலேத் திட்டத்திலே கருத்து மாறுபாடுஏற்பட்டாலும்கூட்டணிக்கு அவசியம் இருக்காது; கலேக்கப்படும்; அதனுல் என்ன?

**கண்:-** நீ ரொம்பப் பொல்லாதவஞ்சே! ஒரு பேச்சுக்கு ஒன்பது பேசுவாயே. கூட்டணியிலே உள்ளவர்கள், ஒருவருக்கொருவர் ஒத்த கருத்து கொண்டவர்களா? எப்படி ஐயா, திராவிட நாடு தனிநாடு என்று பேசும் தி மு. க.வும் இந்திய ஐக்யம் பேசும் கம்யூனிஸ்டும் ஒரு 'கூட்டு' சேரமுடியும்....?

**கத்திரி:-** அடே அப்பா! இது புரியவில்லேயா...பாலம் கட்டுவதற்கு 'வேலே' நடக்குதேல்லோ! நீங்க சைவர், உங்க என்ஜினியர் வைணவர், அவருக்குத் துணே அதிகாரி கிருஸ்தவர், மற்ருெருவர் முஸ்லீம்....

**கண்:-** ஆமாம், ஒரு பார்சி கூடத்தான் இருக்கருர்....

**கத்திரி:-** இருக்கருர்களேல்லோ..... பாலம் கட்டுகிறவேலேயிலே எப்படி ஐயா, இத்தனே மதக்காரர்களே ஒன்ருகக் கூட்டிவைத்து வேலே வாங்கமுடியுது.

**கண்:-** அடெ! அதுபோல.......

**கத்திரி:-** அது போல, எல்லேப் பிரச்சினே, தமிழன் மானப்பிரச்சினே. இதுவரையிலே மற்ற விஷயத்திலே மாறுபட்ட கொள்கைகொண்டவர்களாக இருப்பவர்களாக இருந்தாலும் கூட்டாக வேலேசெய்ய ஒரு கூட்டணி ஏற்படுத்திஞ, இதிலே என்ன தவறு? இதிலே சந்தேகம் ஏன் ஏற்படவேணும்.

**கண்:-** அடேஅப்பா நீ என்ன என் மேலே சீறிவிழுறே! நான் காமராஜர் சொன்னதைச் சொல்றேன்

**கத்திரி:-** எனக்கு உண்மையா காமராஜர்பேரிலே கோபம் இல்லே உங்கபேரிலேதான் கோபம்.

**கண்:-** என்னப்பா, வம்புக்காரஞ இருக்கே... காமராஜர் கூட்டணி பற்றிப் பேசிஞ, தாக்கிஞ அதை நான் எடுத்துச் சொல்றதுக்காக என் மேலே கோபம் கொள்வதா, நல்லா இருக்கே நியாயம்!

**கத்திரி:-** அவர், ஏதாவது பேசியாகணும் என்கிறதுக்காகசொத்தை வாதம் பேசருரு...மாதம் சுளே சுளேயா வாங்கறதுக்கு இது கூடச் செய்யாவிட்டா, எஜமான் சும்மாவா இருப்பார்...அதனுலே உங்களேப்போலே, விஷயம் தெரிந்தவர்கள், சொல்லப்படுகிற விஷயத்திலே ஒழுங்கு, உண்மை, நீதி நியாயம் இருக்குதா என்று பார்க்க வேண்டாமா! அறிவுக்குப் பொருந்துதா என்பதை கவனிக்க வேண்டாமா. கூட்டணியிலே, பலமாதிரி கொள்கைக்காரர் இருப்பதுதான், குத்துது குடையுது! மந்திரிசபை இருக்கே, அது என்ன வாழுது? இல்லே, யோசித்துப் பேசுங்க. மந்திரி சபையிலே உள்ளவங்க அவ்வளவுபேரும் ஒரே கருத்துதான் கொண்டவங்களா, எல்லா விஷயத்திலேயும்.

**கண்:-** நீ இப்ப எதைக் குத்திக் கிளறிக் காட்டறே.......

**கத்திரி:-** நான் குத்திக் கிளறிக் காட்டுவானேன், தாஞத்தான் நாற்றம் அடிக்குதே...தட்சிணப் பிரதேசம் கூடாது என்பது காமராஜர் கொள்கை, ஆஞ ஓயாமல் பேசுகிருரே, மற்ருெரு மந்திரி தட்சிணப் பிரதேசத்தை ஆதரிச்சி........ஒழுங்கா? கூட்டணியைக் கேலி பேசிவிட்டாப் போதுமா? இந்தக்கூத்து எந்த ராஜ்யத்திலே நடக்கும். ஒரு மந்திரி தட்சிணப் பிரதேசம் சரியில்லே என்று பேசறது, மற்ருெரு மந்திரி, தட்சிணப் பிரதேசம் வந்தாத்தான் நாட்டோட தரித்திரம் போகும்னு பேசறது!! சரியா? பேசருரேல்லோ, தட்சிணப் பிரதேசத்தை ஆதரிச்சி, மந்திரி.

**கண்:-** எந்த மந்திரி?

**கத்திரி:-** மணிபர்சு மந்திரி! சுப்ரமணியம்!! எப்படி இப்படி நேர்மாறான கருத்தோட இருக்கிற இந்த இரண்டுபேரும் ஒரே மந்திரி சபையிலே கூட்டுப் பொறுப்பிலே இருக்க முடியுது? ஜீவாவும் நெடுஞ்செழியனும் எப்படி கூட்டணியா இருக்க முடியும், கொள்கை வேறே வேறே அல்லவா என்று பேசுறாரே மேதாவி, இவர் எப்படி சுப்ரமணியத்தோட 'கூட்டு' சேர்ந்து ஆட்சி வண்டியை ஒட்டுறாராம்! கேட்கப்படாதா? ஆயிரக்கணக்கிலே சம்பளம் கிடைக்குது, அதனாலே, ஆமாமும் உஹூமும் ஒன்று கூடிக்கொள்ள முடியுது அங்கே. அப்படித்தானே.

**கண்:-** அது வேறே விஷயமல்லவா ......

**கத்திரி:-** பெரிய இடத்து விவகாரம், அதனாலே உள்ளதைச் சொல்லக்கூடாது. காண்ட்ராக்ட்டர்தானே...வேறே எப்படி நினைப்பு இருக்கும். கேவலம் பதவிக்காக, பணத்துக்காக, பவிசுக்காக, பில்லே போட்ட சேவகனும் வெல்வெட்டு மெத்தையும் வேணும் என்கிறதுக்காக, ஒருவருக்கொருவர் கொள்கையிலே வித்யாசம் விரோதம் கொண்டிருக்கிறவர்களெல்லாம், கூட்டு கூடிக் கொண்டு, கோட்டையிலே கொலு இருக்கலாம், ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்காக பல கட்சிக்காரர் ஒரு கூட்டணி ஏற்படுத்தினா, அது தவறு!

**கண்:-** விடுடாப்பா, விடு.

**கத்திரி:-** இப்படி ஏன், ஆப்பை அசைக்கணும், பிறகு காகூன்னு கதறணும். நான்தான் கேட்கறேன், நீங்க சொல்லுங்களேன். ஜாதி, குலம், வகுப்பு எதுவும் கூடாது, ஒரே தேசம், ஒரே இந்திய இனம், என்பதுதானே காமராஜர் கொள்கை......

**கண்:-** ஆமாம் அதற்காகத்தானே அவர் முப்பது வருஷமாப் பாடுபடுகிறாரு.

**கத்திரி:-** சரி. அது பைத்யக்காரத்தனம், என்னோட வன்னிய இனத்துக்கு வரவேண்டிய பங்கு வரவில்லேன்னா, உங்க வாலே ஒட்ட நறுக்கிடுவேன் என்று ஊரறிய உலகறியச் சொனன வருதானே ராமசாமிபடையாச்சி. ஒட ஒட விரட்டி அடித்தாரேல்லோ, காங்கிரசாரை தேர்தலிலே. இப்ப, எப்படி ஐயா, அவரோட கூட்டுகூடி மந்திரி வேலே பார்க்கறாரு, காமராஜரு ......

**கண்:-** அது ஒரு காரணத்துக்காக ......

**கத்திரி:-** என்ன காரணம்? பதவி! பட்டம்! கொள்ளேச் சம்பளம்! சுயநலத்துக்காக, இப்படி, கொள்கையை மறந்து கூடிக் கொள்ளலாம், அதற்குப் பெயர், ராஜதந்திரம், ராஜ்ய பாரம், அரசியல் யூகம். நியாயமான காரணத்துக்காக, ஒரு குறிப்பிட்ட காரியத்திலே ஒத்த கருத்து இருப்பதாலே, அது வரையிலே கூட்டாக வேலே செய்யலாம் என்று சொல்லி கூட்டணி சேர்ந்தா, அது கேவலமா! என்ன நியாயபுத்தி ததும்புதய்யா, உங்களோட பேச்சிலே...சே! பம்பரம் ஆடற சிறுவன்கூடப் பரிகாசம் செய்வான்.

**கண்:-** அதுசரி, ஆனா, கூட்டணி என்ன செய்து என்ன பயன்? தேவிகுளம் பீர்மேடு போனது போனது தான்னு நேரு சர்க்கார் சொல்லிவிட்டுதே. மசோதா வருதே. என்ன செய்யப்போவுது கூட்டணி?

**கத்திரி:-** நமக்கு ஒரு மானங்கெட்ட மந்திரிசபை இருக்கிறதாலே, டில்லி சர்க்கார் அக்ரமத்தைக் கூசாமல் செய்யுது என்பதை ஊருக்கு எடுத்துச் சொல்லி, இந்த மந்திரிகளோட யோக்யதையைப்பற்றி நாடு சிரிப்பாச் சிரிக்கச் செய்வோம்.......

**கண்:-** உங்க முகத்திலே கரி பூசுது டில்லின்னுதானே, காங்கிரசு ஆளுங்க பேசுறாங்க...

**கத்திரி:-** வேறெப்படி பேசுவாங்க, பாபம் கரடியாக் கத்திப் பாத்தாங்க, காவடி தூக்கி ஆடிப் பாத்தாங்க, டில்லி, சென்னே காங்கிரஸ் சர்க்காரை சட்டை செய்யல்லே. குனியக் குனியக் குட்டுது! அந்த அவமானத்தை மறைக்க, கூட்டணிமேலே சேறு வீசறாங்க, வேறே வழி?

**கண்:-** நீங்க என்ன செய்யப் போறிங்க.

**கத்திரி:-** நாங்களா? முதலிலே இவ்வளவு எழுச்சியும் உரிமை உணர்ச்சியும் நாட்டுமக்களுக்கு இருப்பது கூட்டணி நடத்திய அர்த்தால்மூலம் விளக்கமாயிருக்குதே இதைப் பார்த்த பிறகாவது, யூகம் ரோஷமானம் இளம்பி சென்னே சர்க்கார், தமிழ்நாட்டின் உரிமைக்காக, எல்லேக்காகப் போராடுதான்னு பார்க்கப் போறோம். எல்லேக் கமிஷன் வேண்டுமானா ஏற்படுத்தலாம்னு டில்லியே சொல்லி யிருக்கு; மசோதாவிலேயும் இருக்குது. இதைப் பயன் படுத்தியாவது சென்னே சர்க்கார் நீதி நியாயம் தேடித்தர முன்வருதான்னு பாக்கப்போறோம். சென்னே சர்க்காருக்குத்தானே இப்ப முதல் வேலே இருக்குது, பிறகுதான் கூட்டணிக்குவேலே....

**கண்:-** அப்படியா?

**கத்திரி:-** வேறே எப்புடியாம்!

**கண்:-** ஏன் சட்டசபையிலே மசோதா வரும்போது ஒரு கண்டனம்— ஆர்பாட்டம்—கிளர்ச்சி —போர்—ஏதாவது செய்யலாமே.

**கத்திரி:-** கிளர்ச்சி செய்யவேண்டிய சமயம் அறிந்து, தகுந்த முறையையும் தெரிந்து கூட்டணி முடிவுசெய்யும்...முதலிலே உங்க காங்கிரஸ்கட்சி என்ன செய்யப் போகுது என்பதை அல்லவா பார்க்கப் போகிறோம். தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்யப்போகுதா அல்லது முதுகெலும்போடு நடந்துகொள்ளப்போகுதா என்பதைப்பார்த்தாகணுமே—நாட்டுக்குச்சொல்லியாகணுமே. பிறகு மக்கள் சும்மாவா விடப்போகிறார்கள், தமிழ்த் துரோகிகளே.

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணேயும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

6-பக்கத் தொடர்ச்சி

உன் வேல் விழிப் பார்வை, என் இதயத்தில் மின்னல்போல் ஓடி ஒளி செய்தது. உன் பேச்சு—வாழ்க்கையின் தித்திப்பை எனக்கு ஊட்டியது. நீ என்னை ஏற்றுக்கொள்ளலாம், அல்லது நிராகரித்துவிடலாம். ஆனால், என்னுடைய காதல், இமயத்தைவிட உயரமானது—நிரந்தரமானது. சிவகெங்கை நீர் வீழ்ச்சியைவிட வேகமானது. கடலைவிட ஆழமானது. நீ சரி என்றால், நான் அக்னி குண்டத்திலும் குதிக்கத் தயார்—ஆலகால விஷத்தை அருந்தவும் தயார். உன்னுடைய கருநிறக் கூந்தலிலிருந்து ஒரு மலர் கீழே விழுமேயானால், அந்தச் சிறு துன்பத்தைக்கூட என்னால் சகிக்கமுடியாது, உன்னுடைய பொற்பாதத்தில் மிதிபட்ட காய்ந்த மலரைக்கூட எடுக்க அந்த நாகசேனனுக்குத் தகுதி கிடையாது. அவன் பணப்பேய், காமாந்தகாரன்! கலையுள்ளமோ, உலக அறிவோ இல்லாதவன். அவனுடைய கபடத்திற்கு, கட்டழகியே! நீ பலியாகக் கூடாதென்று நான் எச்சரிக்கை செய்கிறேன்......

படித்துக்கொண்டுவந்ததை நிறுத்திவிட்டு, "அதற்குத் தேவதேவி என்னபதில் சொல்வாள்?" என்று பஞ்சாட்சரம் கேட்டான்.

"அப்பாடி என்று பெருமூச்சு விட்டிருப்பாள்"

"பெருமூச்சு விட்டிருப்பாளா, அவளுக் கென்ன பைத்தியமா?"

"அடைமழை பெய்துவிட்டதல்லவா — அதனால் இனி ஆபத்தில்லை என்று..."

"போதும் சூடா, உன் குறும்பு... சூரியா தன்னைச் காதலிப்பான் என்று தேவதேவி என்றுமே சந்தேகப்பட்டதுகிடையாது! எரிமலை கனல் கக்கியதைப்போல, அவன் தன் காதலைக் கொட்ட ஆரம்பித்ததும், அவள் திகைத்துப் போனாள். அவனொரு மாபெரும் கவிஞன் என்பதினால், அவனிடத்தில் அவளுக்கு மதிப்பு உண்டு! ஆனால் அந்த விகாரமானவனைத் தன் கணவனாக என்றுமே அவள் கற்பனை கூடச் செய்துபார்த்தது கிடையாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவளுடைய மனதில், எப்படிப்பட்ட எண்ணம் எழுந்திருக்கும்?

"எனக்கென்ன தெரியும் — அந்தத் தேவியையே கேட்டுப் பாருங்களேன்"

"அந்த நிலையில் நீயே கொஞ்ச நேரம் இருப்பதாக நினைத்துக் கொள்ளேன்"

"அந்தத் துர்ப்பாக்கிய நிலை எனக்கு எதற்கு ஏற்படப்போகிறது"

"நீ சொல்லாவிட்டால் பரவா இல்லை, நான் என்ன யூகிக்கிறேன் தெரியுமா?"

"உங்களுக்குத் தெரியாத செய்தியை—உங்கள் அனுபவத்தால் அறிய முடியாத விஷயத்தை—நீங்கள் எதற்காக எழுதவேண்டும்"

"அதுதான் கலைஞனின் மகத்தான திறமை. சகலவிஷயத்தையும் அவன் கற்பனைசெய்கிறான். அவனுடைய கற்பனைக்கு எட்டாதது, எந்த உலகத்திலுமே கிடையாது. அவனுடைய கற்பனை என்ற கண், மகா சக்தி வாய்ந்தது......" என்று பெருமிதமான குரலில் பேசிக்கொண்டே வந்தவன், யாரோ "சூடாமணி, சூடாமணி" என்று அழைப்பதைக் கேட்டதும், திகைத்து நின்று விட்டான்.

"அட அட! யார் அது சனியன்! இந்த வீட்டில் எந்நேரமும் தொல்லையாகவே போய்விட்டதே" என்று எரிச்சலோடு மனைவியைப் பார்த்தான்.

"ஓகோ தேவகியம்மாவா? வாங்க அம்மா, வாங்க," என்று சொல்லிக் கொண்டே, சூடாமணி வேகமாக வெளியே சென்றாள்.

அவன் வெறிப்பிடித்தவனைப் போல, அறையில் உலவ ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து சூடாமணி உள்ளே வந்தாள்.

"அனுப்பிவிட்டாயா?" என்று வெறுப்போடு கேட்டுக்கொண்டே, நாற்காலியில் உட்கார்ந்தான்.

"ஆமாம், அத்தான், பாவம் அந்த அம்மாள் குய்யோமுறையோ என்று அழுகிறாள். அந்த வஞ்சகன் இருக்கிறானே..........அந்த அம்மாவின் மைத்துனன்...அவன்தான் சுத்த போக்கிரி சிவஞானம்......வீட்டைவிட்டுத் துரத்திவிட்டானாம். கணவன் செத்து, இன்னும் ஒரு வருஷம்கூட ஆகவில்லை! அதற்குள் அந்தப்பாவி இவளைக் கொடுமை செய்ய ஆரம்பித்துவிட்டானாம். உங்க அப்பாதான், ஐந்தாறு வருஷங்களுக்குமுன், அந்தக் குடும்பத்தில் பாகப் பிரிவினை செய்து வைத்தாராம். இருக்கிற கொஞ்சமும் போய்விட்டால், அந்த அம்மா எப்படி வாழ்வது? பாவம் துணையாரும் இல்லாதவள் என்பதினால், அவன் படாதபாடு படுத்துகிறானாம். இந்த வீட்டில் உனக்கென்ன உரிமை இருக்கிறது போ வெளியே என்று துரத்தி விட்டானாம். இந்த விவகாரத்தில் நீங்கள் கொஞ்சம் அக்கரை காட்ட வேண்டும்."

"என்ன?"

"ஆமாம் அத்தான், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்போகிறாளாம். நீங்கள் அவள் சார்பில் சாட்சியம் கூறவேண்டும்."

"அடபாவமே, காவியம் படிக்கும் இந்த வாயாலா, பொய்ச சாட்சியம் சொல்லவேண்டும் என்கிறாய்?" என்று பயந்தவனைப்போல, கையால் வாயை மூடிக்கொண்டான்.

"இதில் பொய் என்ன இருக்கிறது, உண்மையைத்தானே சொல்லச் சொல்கிறேன்."

"போதும் போதும், பாவம் அவங்கோ, பாவம் இவங்கோ என்று அடிக்கடி நீ பேச ஆரம்பித்து விட்டாயே, இத்தகைய மோசமான சூழ் நிலையில், நான் எப்படிக் கலையை உற்பத்தி செய்ய முடியும்? கலாதேவியின் தரிசனம் எனக்கு எப்படிக் கிடைக்கும்? அதற்காகத்தான் மனித சஞ்சரமே இல்லாத இடத்தில், கவிஞர்களும் கலைஞர்களும் வாழ வேண்டும் என்கிறார்கள்! நானும் போகிறேன்!" என்று கடுங்கோபத்தோடு சொல்லிக் கொண்டே, மேசைமீதிருந்த காகிதங்களைச் சுருட்டி எடுத்துக் கொண்டு, வேகமாக அந்த அறையை விட்டு வெளியே சென்றான்.

"இருங்கோ, இருங்கோ அத்தான்" என்று பயந்த குரலில் சொல்லிக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்தாள்.

தெருவில் அடியெடுத்து வைத்ததும், ஒருகணம் அவன் தயங்கி நின்றான்.

அவள் தெருத்தூணைப் பிடித்துக்கொண்டு, "எங்கே போகிறீர்கள் அத்தான்" என்று தழதழத்த குரலில் கேட்டாள்.

"எந்த நதி தீரத்திற்கோ—எந்த மலைச்சாரலுக்கோ — எந்தக் காட்டுப் புதருக்கோ—நான் போகிறேன் நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, அவன் வேகமாக நடந்து சென்றான்.

"ஐய்யோ கலையே!" என்று சொல்லிக் கொண்டே, அவள் திண்ணையின் மீது சோர்ந்து உட்கார்ந்துவிட்டாள்!!

★

# என்ன இல்லை, வாழ!

"இந்தியாவின் எந்த ஓர் பகுதியும் தனித்து வாழமுடியும் என்று கூறப்படும் வாதம் அற்பத்தனமானதாகும். அது வெறும் சாத்தியக் கூறற்ற பகற்கனவு" என்று அண்மையில் அசாம் எல்லையில் நாகமலைச் சாரலில் போர்க்கொடி உயர்த்திப் போராடும் பிஜோவின் தனி நாகநாடு கோரிக்கையைக் குறித்து கருத்தறிவிக்கையில், பஞ்சசீலத்தின் தந்தை, சமாதானத் தூதுவன், ஜனநாயகத்தின் மறுபதிப்பு என்றெல்லாம் விளம்பரப்படுத்தப்படும் நேரு பண்டிதர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நாகர்கள் உணர்ச்சி வசப்பட்டோராய் அவர்தம் போராட்டத்தை அநாகரீக முறையில் நடத்துகிறார்கள் என்ற ஒரே காரணத்தைக் காட்டி தனி நாடு கோரிக்கையே தவறெனக் கொள்வதும், அக்கோரிக்கையை வற்புறுத்துவதே அற்பத்தனமானதென்று கருத்துக்கொள்வதும் நியாயத்தின்பாற்பட்டதாகாது.

இந்தியாவின் எந்த ஓர் பகுதியும் தனித்து வாழமுடியாது என்று ஆணித்திறமாகக் கூறுவதன் மூலம் சுதந்திர திராவிடக் கூட்டாட்சி கோரும் நம்மையும் வலிய வம்புக்கிழுக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

திராவிடநாடு வடநாட்டின் பாசீசப் பிடியிலிருந்து விடுபட்டு, தனிநாடாக எழிலோங்கி வாழவேண்டும்; வாழமுடியும் என்பதை நாம் பன்முறை ஜனநாயக வரம்புக்கு உட்பட்ட வகையில் எடுத்துக் கூறியும், உணர்த்தியும் வந்துள்ளோம். என்றாலும், தனிநாடு கோரிக்கை சாத்தியக்கூறற்றதாம்; பகற்கனவாம். கூறுகிறார் பாரதரத்னம் பண்டித நேரு.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் 16 புதிய நாடுகளை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டிய என்ற கோரிக்கையை பொதுச் சபையில் வற்புறுத்தினர் தனது வெளி விவகாரக் கொள்கையின் வாரிசு வி.கே. கிருஷ்ணமேனன் மூலம். ஜனநாயகத்தில் பற்றுக் கொண்ட மற்றைய நாடுகளும் அச்சிபாரிசைஏற்றுக்கொண்டன. நேற்று வரை ஐ. நா. சபை விவகாரங்களில் கலந்துகொள்ள இயலாது தனித்திருந்த அந்த நாடுகள், வரும் சபைக் கூட்டத்தில் வல்லரசுகளின் பிரதிநிதிகளோடு தங்கள் நாட்டு பிரதிநிதிகள் அமரப்போகும் சிங்காரக் காட்சியைக் கண்டு சிந்தைகுளிரப்போகின்றன.

நேரு சிபார்சு செய்த அந்த 16 நாடுகளும் ஏகாதிபத்தியவாதிகளின் காலடியில் கிடக்கும் காலனி நாடுகளல்ல. தனிச் சுதந்திர நாடுகளாகும். அவை முறையே:- அல்பேனியா, அயர்லாந்து, ஆஸ்திரியா. இத்தாலி, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, பின்லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகளும், கம்போடியா, லாவோஸ், இலங்கை, நேபாளம் ஆகிய ஆசிய நாடுகளும். ஜோர்தான், லிபியா ஆகிய அரேபிய நாடுகளும் ஆகும்.

மேற்காணும் சுதந்திர நாடுகளில் எந்த ஒரு நாடேனும் நாம் கோரும் திராவிட நாட்டைவிட பரப்பளவிலோ மக்கட் தொகையிலோ, நீர், நிலவளத்திலோ, கனிச் செல்வங்களைப்

**புவியரசு**
கர்னூல்

பெற்றிருப்பதிலோ, இயற்கை அரண்களிலோ, நீண்ட பெரும் கடற்கரைகளைக்கொண்டோ சிறந்து விளங்குகின்றனவா என்றால், நிச்சயம் இல்லை என்றே கூறலாம்.

பட்டியலில் காணும் நாடுகளின் பரப்பளவும், மக்கட் தொகையும்:—

| நாடு | மக்கட் தொகை | பரப்பளவு சதுரமைல் |
|---|---|---|
| அல்பேனியா | 11,75,000 | 10,029 |
| அயர்லாந்து | 29,60,593 | |
| ஆஸ்திரியா | 69,34,000 | 32,369 |
| இத்தாலி | 4,68,89,000 | 1,16,228 |
| பல்கேரியா | 70,22,206 | 42,848 |
| ஹங்கேரி | 92,70,386 | 35,902 |
| ருமேனியா | 1,58,73,000 | 91,584 |
| பின்லாந்து | 41,21,835 | 1,30,165 |
| போர்ச்சுகல் | 85,49,000 | 34,500 |
| ஸ்பெயின் | 2,83,06,000 | 1,96,700 |
| கம்போடியா | 38,00,000 | 88,000 |
| லாவோஸ் | 13,00,000 | 69,000 |
| இலங்கை | 83,00,000 | 25,000 |
| நேபாளம் | 70,00,000 | 54,000 |
| ஜோர்தான் | 14,00,000 | 37,000 |
| லிபியா | 15,000,00 | 6,79,000 |

இவற்றிலே பல நாடுகள் வெறும் பாலைவனப் பகுதிகளை மட்டுமே கொண்டவைகள்: சில பயிர்த் தொழிலில் சிறந்து கனிச் செல்வத்திற்குக் கையேந்தி நிற்பவைகள்; வேறு பல காட்டு வளம் மிகுந்து நாட்டுச் செல்வம் குறைந்தவைகள்; சிலவோ எண்ணெயை விற்று கோதுமை வாங்கி பருத்திக்கு பண்டமாற்றுச் செய்து பிழைக்கவேண்டிய நிலையில் உள்ளவைகள்; இன்னும் சில மலை வளமும், நீர் வளமும் பெற்று நிலவளமின்மையால் நலிவன. என்றாலும், அவைகள் தனிநாடுஅமைத்து, தனிக் கொடி ஏற்றி ஐக்கிய நாடுகள் சபை

யில் அமரும் தகுதியும் பெறுகின்றன;

11லட்சம் மக்கள் தொகைகொண்ட அல்பேனியா, 13 லட்சம் பேர் வாழும் லாவோஸ், 14 லட்சம் 15 லட்சம் மக்கள் வாழும் ஜோர்தான் லிபியா தனி சுதந்திர நாடுகள். ஆனல், 873 லட்சத்துக்குமேல் (ஆந்திரா-தெலுங்கானு, தமிழகம், கேரளம், கர்னடகம், குடகு ஆகிய பகுதிகளின் மொத்த மக்கட் தொகை 8,73,18,720 என்று 1951ம் ஆண்டு சென்ஸஸ்கூறுகிறது) மக்கட்தொகை கொண்ட திராவிட நாடு வடநாட்டு வணிகக்கோமான்களின் வேட்டைக்காடு.

இந்தியாவின் எந்த ஒரு பகுதியும் தனித்து, தனி நாடாக இயங்கமுடியாது என்பது பண்டிதரின் வாதம்.

36 ஆயிரம் மைல் பரப்பளவு கொண்ட ஹங்கேரியும், 34 ஆயிரம் மைல் பரப்பளவுகொண்ட போர்ச்சுகலும் தனியாட்சி அமைத்துக்கொள்ளும்போது, இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் மைல் பரப்பளவு கொண்ட ஓர் வளமான பெரிய நிலப் பரப்பு தனியரசாய் மலருவது எந்த அளவில் சாத்தியக்கூறற்றதென்று அவர் கூறுகிருர் என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லே.

தவிர, உலகில் ஆட்டுஉரோமத்தையும், கோதுமையையும் நம்பி வாழும் ஆஸ்திரேலியா, கண்ணுடித் தொழிலில் காலட்சேபம் நடத்தும் பெல்ஜியம், விவசாயத்தைமட்டுமே உறுதுணையாகக்கொண்ட பூட்டன், எண்ணெய்க் கிணறுகளையே நம்பி வாழும் சவூதி அரேபியா, ஈரான், காப்பிக் கொட்டையை நம்பிக் காலந்தள்ளும் பிரேசில், அரிசியையும். தேக்கையும் வணிகப் பொருளாகக் கொண்ட பர்மா, செம்பு பித்தளையை நம்பி வாழும் சிலி, பால் கட்டித் தொழிலே மட்டுமே பக்கத் துணையாகக்கொண்ட டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பால்ஸா மரத் தொழிலே நம்பிவாழும் ஈகுவேடார், தீப்பெட்டித் தொழிலே மட்டுமே நடத்திப் பிழைக்கும் பின்லாந்து, பாக்சைட் கனிப்பொருளேமட்டுமே பெற்று வாழும் வாய்ப்புபெற்ற ஹங்கேரிபோன்ற நாடுகள் தனிநாடுகளாய், தலே நிமிர்ந்து நிற்க, 'எல்லா வளமும் வசதியும் பெற்ற திராவிடம் வடநாட்டு ஆதிபத்தியவாதிகளின் கொட்டடியில் கட்டிக் கிடக்கும் பட்டிபோல் அடிமை வாழ்வு வாழவேண்டுமாம். என்ன நீதியோ!

திராவிடம் என்ன பாலேவனமா? பனிப்பாறை படிந்த தூந்திரப் பிரதேசமா? ஊறல் நிலப்பரப்புக்கொண்ட உதவாக்கரை நாடா?

வயல்களில் நெல்லும், கம்பும், கேழ்வரகும், தினேயும், தோட்டங்களில் காப்பியும், தேயிலேயும், ஏலமும். மிளகும், கரும்பும், புகையிலேயும், தென்னேயும், மாவும், பலாவும், காடுகளில் அகிலும் தேக்கும், சந்தனமும், இரப்பரும் விளேயும் நிலப்பரப்பையும், கடலுக்கடியில் முத்தையும், கோதாவரி, கிருஷ்ணு, துங்கபத்திரா, காவேரி, பெண்ணே, வைகை, தாம்பிரபரணி போன்ற ஆறுகளேயும் பெற்ற திருநாடாம் நம்மருந் திராவிட நாடு.

இம்மட்டோ! கனிச் செல்வத்திற்குதான் இங்கென்ன குறை.

பெட்ரோலியம், ஹைட்ரோ கார்பன் வாயு, டீசல் எண்ணெய் ஆகியவற்றைத் தரும் பழுப்பு நிலிக்கரி நெய்வேலியிலும், சிங்கரேனியிலும் கிடைக்கிறது.

விசாகை, சந்தூர், சிமோகா போன்ற இடங்களில் மாங்கனீஸ் கிடைக்கிறது.

மைசூர் கோலாரிலும், ஹிபூட்டியிலும் ஏராளமாக தங்கம் கிடைக்கிறது! இந்தியாவில் கிட்டும் 95 சதவிகித தங்கம் கோலாரில்தான் கிடைக்கிறது.

நெல்லூர் மாவட்டத்தில் மைக்கா கிடைக்கிறது. இந்தியா முழுமைக்கும் மைக்கா அதிகம் கிடைக்கும் இடங்களில் நெல்லூர் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது.

சேலத்திலும் மைசூரிலும் ஏராளமாக இரும்பு புதைந்து கிடக்கிறது.

இயந்திரப் பூச்சுக்கு, ஈயத்திற்குப் பதில் பயன்படும் மிக முக்கிய உலோகமான இல்மனேட் உலகிலேயே அதிகமான அளவில் திரு-கொச்சி கடற்கரையில்தான் கிடைக்கிறது.

மைசூர், கிருஷ்ணு, சேலம், காடூர், சித்தால துருக்கம் ஆகிய இடங்களில் குரோமைட் பெருமளவுக்குகிடைக்கிறது.

சிமெண்ட், கண்ணுடி, பேப்பர், ரப்பர், முகப்பௌடர், "ஸ்நோ," ஆகாய விமான பாகங்கள் செய்யும் தொழில்களுக்கு மிகவும் அத்தியாவசியமான மாக்னசைட் இந்தியாவில் முதல்தரமானதும் பெருமளவிலும் சேலத்தில் தான் கிடைக்கிறது.

அலுமினியம் செய்யவும், பெட்ரோலியச் சுத்திகரிப்புக்கும் பயன்படும் பாக்சைட் சேலத்தில் ஏராளமாகப் புதைந்து கிடக்கிறது.

ஒட்டுக்கலவை, வண்ணப்-(வார்ணீஷ்) பூச்சு பில்டர்கள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றிற்கு அவசியமான ஜிப்சம் திருச்சியில் கணிசமான அளவில் கிடைக்க வாய்ப்புள்ளது.

பருத்தி நூற்புத் தொழிலுக்கும், பீங்கான் பாத்திரம் செய்யும் குடிசைத் தொழிலுக்கும் பயன்படும் சீனக்களி ஹைதராபாத். நெய்வேலி, திரு.கொச்சி பகுதிகளில் கிடைக்கிறது.

மற்றும் மின்விளக்குத் தொழிலுக்கு அத்தியாவசியமான டங்ஸ்டனஃகு, இரும்புஆகிய உலோகங்கள்உருக்கத் தேவையான லேம்ஸ்டோன் என்ற சுண்ணும்புக்கல், உலோகக் கைத் தொழிலுக்கு பயன்படும் கியாளேட் அணுசக்தி உற்பத்திக்கு முக்கியத் தேவையான மோனசைட், தோரியம், யுரேனியம் தவிர, இராபைட், ஸ்டேனடட், பெல்ஸ்டர், அஸ்பெஸ்டாஸ், பாரைட்ஸ், பெர்லி, கார்னெட், அட்டேடைட் இன்னும் ஏராளமான கனிச் செல்வங்களேப் பெற்றிருக்கும் நம் நாடு தனித்து வாழ இயலாது-கொத்தடிமைக் கொடுமைக்கு ஆட்பட்டே அடங்கிக் கிடக்க வேண்டும் என்று கூறுகிருர் நேரு துரைமகனுர்! இந்த விசித்திரத்தை எங்கு போய்ச் சொல்வது!!

★

# நமது ஏஜண்டுகள்

## கோலார் தங்கவயலில்

கோலார் தங்கவயலில் திராவிட நாடு விற்பனேயாளராகத் தோழர் கோபால் அவர்கள் 25-3-56 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். கீழ்க்காணும் விலாசத்தில் பத்திரிகை பெற்றுக் கொள்ளலாம். என். கோபால், திராவிட முன்னேற்றக் கழகம், ஆண்டர்சன்பேட்டை. கே. ஜி. எப்.

★

## தாராபுரத்தில்

தாராபுரத்தில் "திராவிட நாடு" விற்பனேயாளராக தோழர். எஸ். வி. சக்கரை அவர்களே ஏற்படுத்தியுள்ளோம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு

## புனுகு பூச்சு போதாது!

**ஆடம்பரமாக அந்த 'நகர்' திறந்துவைக்கப்பட்டது! சென்னை கவர்னரால்!**

**பத்து நாட்களுக்கெல்லாம் பெய்த மழையால் நகரிலுள்ள வீடுகள் விழுந்து விட்டன!**

*

சென்னைக் கூட்டமொன்றிலே பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர், கோவைமாவட்டத்தில் சர்க்கார் வெட்டிய கிணறு ஒன்றைப் பற்றி வெளியிட்டிருந்தார். தாழ்த்தப்பட்டவர்களுக்காக வெட்டப்பட்ட கிணற்றைத் திறக்க கவர்னர் பெருமான் வர இருக்கிறார். கிணறை வெட்ட வெட்ட தண்ணீரையே காண முடியவில்லை. கிணறு திறப்புவிழா நாளும் வந்து விட்டது. அதிகாரிகள், அருகே ஓரிடத்திலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து, இந்தக் கிணற்றில் கொட்டி, ஏக விமரிசையாக விழாக் கொண்டாடி விட்டனர்.

இது, கோவையில். எங்களூரில் நடைபெற்ற விவரம் வேண்டுமா, என்று கேட்டு, செங்கற்பட்டிலிருந்து 'பூவையான்' எனும் தோழர் நமக்குக் கடிதம் தீட்டியிருக்கிறார். அவர் குறிப்பிடும் விவரம்தான், கீழே இருப்பது.

பிற்பட்ட வகுப்பினருக்காகத் தனிக் காலனி ஒன்று கட்டப்பட்டது. கவர்னர் பெருமானும் வந்து திறந்துவைத்தார். ஆனால், பெய்த மழையைக்கூடத் தாங்கவில்லையாம், அந்த வீடுகள்.

தீண்டாமை ஒழிப்பு, அரிஜன முன்னேற்றம் ஆகியவைகளைப் ஆகியவைகளைப் போக்க ஏராளமான பணத்தைச் செலவிட்டு வருவதாகச் சட்டசபையில் பேசிய அமைச்சர் பரமேசுவரன் அறிவிக்கிறார். ஆனால், அப்படிச் செய்யப்படும் காரியங்கள் கொடுக்கும் பலன் என்ன என்பதை விளக்கி இதோ தீட்டுகிறார், செங்கற்பட்டு நண்பர்:

**பேரன்புடையீர்!**

நான் வில்லியர், இருளர், வேட்டுவர் எனக் கூறப்படும் வகுப்பைச் சேர்ந்தவன். தற்சமயம் இவ்வூர் அரசாங்க அலுவலகம் ஒன்றில் "குமாஸ்தா"வாகப் பணிபுரிகின்றேன். சென்ற ஆண்டு இவ்வூரின் ஒதுக்குப்புறத்தில் திரு. எஸ். ஆர். வெங்கடராமன் என்பவர் எங்கள் இனத்தவரைக் கொண்டே சில வீடுகளை இவ்வூரிலுள்ள எங்கள் வகுப்பார் சிலருக்குக் கட்டித் தந்தார். வீடு 10 அடி நீளம் 8 அடி அகலம் தானிருக்கும். அந்தக் காலனிக்குக் "கோகலே நகர்" என்றபெயரிட்டு நம் சென்னை கவர்னர் பெருமான் திரு. பிரகாசா திறந்து வைத்தார். ஆனால், சுமார் 10 நாட்களுக்குப் பிறகு பெய்த மழையால் விழுந்து விட்டன. அப்படியானால் எவ்வளவு உறுதியாக அந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். கவர்னர் திறப்புரையின் போது, "சுமார் 40 குடும்பங்கள் இவ்வூரிலிருந்தும், 18 குடும்பங்களுக்குத்தான் வீடுகட்டிக்கொடுத்திருக்கிறார்கள். இந்த 40 குடும்பங்களில், ஒருவர் கூடப் படித்தவர் இல்லை என்பதைக் கேட்டு நான் ஆச்சரியமும் வருத்தமும் கொள்கிறேன். இப்போது இரு பிள்ளைகள் படிக்கச் செல்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று மகிழ்கிறேன். இந்த வில்லியர்கள் ஊருக்குள் வீடு கட்டிக் கொண்டு வசிப்பதை இவ்வூரார் விரும்பாமல் அவர்களை விரட்டியடிக்கின்றராம். அதனுக்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்று கூறினார்.

வில்லியர், இருளர், வேட்டுவர் முதலியோர் ஏன் இன்னும் கற்கால வாசிகளாகக் காடு சுற்றும் கேடுகெட்ட நிலையில் இருக்கிறார்கள்? ஊருக்குள் எல்லோரையும் போல ஏன் இந்த 1956—ம் ஆண்டிலும் குடியிருக்கஇயலவில்லை? காஞ்சியில் நடைபெற்ற சென்ற தி. மு. க. மாவட்ட மாநாட்டில் நான் அண்ணா அவர்களைக் கண்டு எங்கள் இன நிலை குறித்து அறிவுரை கேட்டபோது அவர்கள் "பல ஆண்டுகளுக்கு முன் குருவிக்காரரை ஒன்று சேர்க்க முயன்றோம். அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத தங்காமல் பல ஊர்களுக்கும் சென்று சுற்றிக் கொண்டேயிருப்பதால் அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. அதே மாதிரி உங்கள் இனத்தாரும் பிழைப்பிருக்கும் இடம் தேடி அடிக்கடி இடம் மாற்றிக் கொண்டேயிருப்பதால் ஏதும் செய்ய முடியாதுதான். ஆனால், உன்போன்ற படித்தவர்கள் முன் வந்து தொண்டாற்றினால் முடியும்.

"ஜாதிமதம் இல்லையடி பாப்பா!" என்று பாடும் இந்தப் புண்ணிய பாரதத்தில் ஆதித்திராவிடரும் வில்லியர், இருளர், வேட்டுவர் எனப்படும் நாங்களும் ஊரின் ஒதுக்குப் புறத்தில்-தனியிடத்தில்—சேரியில்—காலனியில் வாழ வேண்டியதுதான் எங்களுக்கு இந்நாட்டு அரசியல் சட்டம் தரும் பிறப்புரிமையா?

தனியாகக் காலனியோ வீடுகளோ கட்டிக்கொடுப்பதை விட்டு, ஊருக்குள்ளேயே வீடுகட்டித் தந்து வாழ வசதிசெய்யுமா, அரசாங்கம்? ஊருக்குள் வசித்தால்தான் அவர்கள் வாழக் கற்றுக்கொள்ள முடியும். அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்விமுறை ஏற்படுத்தினால் தான் சட்டத்திற்குப் பயந்து சிறுவர் சிறுமியைப் பள்ளிக்கு அனுப்புவர். மேல் ஜாதியினர் எனப்படுபவரிடம் நாங்கள் படுகின்ற இன்னலைத் தீர்க்க முன் வருவார்களா?"

*

சமூகக் கொடுமையை அழிப்பது என்பது, நச்சுமரத்தின் கிளை ஒன்றை வெட்டிவிடுவது போன்ற காரியமல்ல.

சாதிக்கொடுமை எனும் ஆணிவேரையைக் கெல்லி எரிய வேண்டிய காரியமாகும். புண்ணை மறைக்க புனுகு பூச்சுப் பயன்படாதென இதனால்தான் கூறிவருகிறோம்.

அமைச்சர் பரமேசுவரன், பிற்பட்ட வகுப்பினருக்காகச் சர்க்கார் எவ்வளவு பணம் செலவழிக்கிறது தெரியுமா, எனக்கேட்கிறார். பணம் செலவழிக்கப்படலாம்; நாம்மறுக்கவில்லை. ஆனால், அது எந்தெந்த முறைகளில் செலவழிக்கப்படுகிறது என்பதுதான் பிரச்னை.

வீடு, இடிந்தது, சிறு மழையில் என்கிறார் தோழர்! அதுவும் கவர்னர்பிரான் சென்று திறந்து வைத்த காலனியில்!

இப்படிப்பட்ட வகையில் பணம் செலவழிந்து என்ன பிரயோசனம்? பிற்பட்ட வகுப்பினருக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிட முடியும்?

**தனியாகப் பிரித்து காலனி கட்டிக் கொடுப்பதோ, அல்லது அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சேவா சிரமங்களை நடத்துவதோ பிற்பட்ட வகுப்பினரின் அல்லலைத் தீர்த்துவிடாது.**

அதைத்தான், நண்பரின் கண்ணீர் கலந்த இக்கடிதம் விளக்குகிறது.

*

கருத்து மன்றம்

# தருமன் சால்பு 3

[ புலவர் நா. இராசகோபாலன் ]

வட நாட்டினரும், அவர் தம் கருத்தை அவாவி மேற்கொள்பவரும் போற்றும் பெரியோர்களைப் பற்றி, நாம் சிறிது சிந்திப்பின் தருமன் சால்பு தெள்ளத் தெளியப் புலனாகும். வடவரால் பெரிதும் வணங்கப்படுபவர்களில் இராமன், கிருஷ்ணன், இந்திரன் முதலானோர் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் மூவரும் இறைவனாகத் தலை வணங்கிப் போற்றப்படும் நிலையினர். இவர்களில் இராமன் பேராற்றல் மிக்க பெருவீரன் என்று பறைசாற்றப்படுபவன். அவனுடைய விற்படைவலிமையை நேரில் கண்டவர்போல அவனை 'வல்வில்' இராமன்' எனவும் உரைத்தனர் சிலர். அந்த மாபெரும் வீரன் அவர்கள் கூற்றுப்படியே வாலி என்ற வீரனை மறைந்து நின்றுகொன்ற மாண்புடையான்! வேறுபட்டு, பொருந்தாத ஆற்றில் நின்ற உடன் பிறந்தவனால் உளவறிந்து அதைப் பயன்படுத்தி மாற்றானைப் புறங்கண்ட செம்மையான நெறியினன். இப்படிப்பட்ட அருங்குணச் செம்மல் அவர்களின் இறைவன்!

அடுத்து வரும் கிருஷ்ணன் திருடுவதில் இணையற்ற நிபுணன். பொய் சொல்வதில் புதியவர்களுக்கு வழிகாட்டி. மங்கையரின் உடைகளைக் கவர்ந்து, அவர்களுக்கு வேதனையை உண்டாக்கி, அதை இரசித்த கலையுலகத்தின் தனிப்பெரும் உச்சி. இத்தகைய தூய பண்புகளுக்கு இருபபிடமாய்—நிலைக்களனாய் நின்ற அத்தோன்றல் அவர்களின் கடவுள்!

மதுவும். மடந்தையுமே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, முனிவரின் மனைவியாய் மாறிவிட்டாலும் விடாமல் பின் தொடர்ந்து, அதற்குப் பரிசாக ஆயிரம் குறிகளை அணிகலனாக அவர்கள் கருத்துப்படி பெற்றாலும், அதனையும் "ஆயிரங் கண்ணோன்" என்று பட்டப்பெயராக அமைத்துக்கொண்ட பெருந்தேவன் இந்திரன் அவர்கள் வழிபடும் கடவுளர்களில் முக்கியமானவன்.

தருமனை அவர்கள் முழுக் கடவுளாகக் கொள்ளாவிட்டாலும், கடவுளின் மகனாக அவனை அமைத்து விட்டார்கள். ஆகவே அவனிடம் பஞ்சமா பாதகம் இருந்தது தவறு என்று எண்ணவில்லை. ஒருவேளை அந்தக் குற்றங்கள் தருமனுக்கு இருக்க வேண்டியதுதான் இயல்பும் இலக்கணமும் ஆகும் என்றே எண்ணி இருப்பார்கள்.

எனவே, அத்தகைய கடவுட் குணங்கள் இல்லாத துரியோதனன் தீயோனாகவும், இராவணன் இராக்கதனாகவும், தமிழ் அரசர்கள் அசுரராகவும் அவர்கள் கருத்துக்குத் தோன்றியதில் வியப்பில்லை.

வடவரின் கொள்கையைக் குறளின் விளக்கவுரைக்கண் பரிமேலழகர் ஓரிடத்தில் தெளிவாகக் கூறிச் செல்கிறார்.

தமிழர்கள் மானம்உடையவர்கள்; மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமானைப்போல, மானம் சிறிது நீப்பினும் உயிர் வாழாத் தன்மை வாய்ந்தவர் தமிழர். வடவர் அவ்வறன்று; தமிழருக்கு மானம் முக்கியமானால் வடவருக்கு அதைவிட உயிர்தான் முக்கியம், ஆகவே, உயிரைக் காப்பாற்ற எத்தகைய இழிதொழிலையும் (பொய், கொலை, கொள்ளை, களவுஎதைவேண்டுமானாலும்) செய்வார்கள் வடவர்கள், அப்படிச் செய்வதுதான் அவர்களின், இயல்பும், சான்றோர் போற்றிய நூல் நெறியுமாகும் என்பதை "இறப்பவருவுழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூன் முறை" தொடரால் அறியாதோர்க்கும் அறியக் காட்டுகிறார் பரிமேலழகர், குறள் 961 விளக்கவுரையில்.

ஆகவேதான், அசுவத்தாமன் இறந்தான் என்று பொய்கூறி, போரில் பலரைக் கொலைசெய்து தனக்குச் சிறிதும் உரிமையில்லாததை அறிந்தும் ; துரியோதனின் நாட்டைக் களவு செய்ய எண்ணி, தம்பிக்குரியவளைத் தகாத முறையில் காமத்தால் விரும்பி, அளவுகடந்து, சூதாடி நற்பண்புக்கு இடந்தராத ஒருவன் 'தருமன்' என்று சிறப்பிக்கப் பெற்றான். தனிமையில், துரியோதனன் மனைவியோடு தாயம் ஆடியகர்னன், கணவன் வருகையைக் கண்டு இடையே எழுந்த துரியோதனன் மனைவியின்மணி மாலையைப் பிடித்திழுத்த சமயத்தில் சிதறி விழுந்த முத்துக்களின் காட்சியை நேரில் கண்டபோதும் 'எடுக்கவோ? கோக்கவோ? "என்று களங்கமற்ற உள்ளத்தால் கேட்ட துரியோதனன் தீயோன் என்று தாழ்த்தப் பெற்றான்.

தருமனிடம் அமைந்திருந்த குணங்கள் தமிழ் முறைப்படி—மனிதத் தன்மையின்படி தவறு; ஆனால், பரிமேலழகர் காட்டும் வடநூன் முறைப்படி அவை தரும குணங்கள் வடவருக்கு! எனவே, மூக்கின் நுனியில் கோபம் துடிப்பவனுக்குச் சாந்தகுமாரன் என்று பெயர் இருத்தல்போல, தரும குணங்கள் அணுவளவும் இல்லாதவனுக்குத் 'தருமன்' என்ற பெயர் சூடப்பட்டதுபோலும்! ஆகவே, நாவலர் முடிவு எவ்வாற்றானும் சரியேயாகும்.

★

**ம**ற்றவர்களுடைய வாழ்க்கையைச் சோலைவனமாக்கப் பாடுபட்டான் **ஆபிரகாம்லிங்கன்!** ஆனால், அவனுடைய வாழ்க்கையோ வறண்டதோர் பாலைவனமாகப் போயிற்று!! அதற்குக் காரணம், படத்தில் தென்படும் அவனுடைய இல்லறத் துணைவியான மேரிடாட் என்பவள் தான்.

இரு துருவங்கள்போலிருந்தனர், இருவரும் —கொள்கையில், எண்ணங்களில். லிங்கனோ, ஏழை! வாழ்நாளிலேயே பன்னிரண்டு மாதங்களாவது பள்ளிக்கூடம் போயிருப்பானா என்றால் கிடையாது. அவளோ, அதிகமாகப் படித்தவள். அதோடு, அவளுடைய பிறந்தகப் பெருமைகளும் அதிகம்; உறவினர்களெல்லாம் பெரிய பெரிய அதிகாரிகள். அப்படிச்சொல்லிக் கொள்ள, லிங்கனுக்கு யாரும் கிடையாது. ஏனெனில், திருடியதற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் — வறுமை நிரம்பியவர்கள்தான், அவனது உறவினர்கள்.



ஆடம்பரமாக உடுக்கவேண்டும்! பெருமையாக வாழவேண்டும்! என்பதில், மிக்க ஆசை கொண்டவள், மனைவி. அவனோ, உடையிலும், உணவு விஷயத்திலும் சிறிதுகூட அக்கரை கொண்டவனல்ல. தன் கணவன், எல்லாப் பிரபுக்களையும் போல இருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தாள். அவனோ, சாதாரணதுகளில் ஒருவனாகவே, இருந்தான்! எப்படிப் பொருத்தம் ஏற்படும்?

தனக்கும் அவளுக்கும் பொருந்திவராது என்கிற விஷயம், இருவருக்கும் திருமணம் நிச்சயமானபிறகே, லிங்கனுக்குப் புரியலாயிற்று. உடனே, உள்ளத்தை அவளுக்குத் திறந்து காட்டிவிடலாமென்று எண்ணியவனாய், ஒரு கடிதம் வரைந்து, அதில் "நான் உன்னை இருதய பூர்வமாகக் காதலிக்கவில்லை. ஆகவே, என்னை மறந்துவிடு" என்றுகுறிப்பிட்டு,கொண்டுபோய்க் கொடுக்குமாறு ஒரு தோழன் வசம் அளித்தான் கடிதத்தை தோழன், சுக்குநூறாய் அக் கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, "லிங்கா! இப்படியெல்லாம் எழுதாதே. உன் கருத்தை அவளிடமே போய்ச் சொல்" என்றானாம். லிங்கனும் போய்ச்சொன்னான். எப்படி இருக்கும் அவளுக்கு? ஓவென்று அழலானாளாம்! எப்போதுமே இரக்க சுபாவமிக்கவன் லிங்கன். கன்னியின்கண்ணீர் கரைத்தது! அவளைத் தேற்றுவதற்காக உறுதியைத் தளரவிட்டான். மணக்க சம்மதித்தான்.

*1841*-ஜனவரி முதல் நாள், திருமண ஏற்பாடு எல்லாம் முடிந்துவிட்டது. மணமகள், காத்துக்கொண்டிருக்கிறாள். மாப்பிள்ளையோ, கண்ணீருங் கம்பலையுமாய், வேறிடத்தில் கிடந்தான்! திருமணம் செய்துகொள்ள வரவில்லை. நண்பர்களிடமெல்லாம், "வாழ்வே, எனக்குக் கசந்து போய்விட்டது. உயிரைவிட்டுவிடலாமா" என்று பார்க்கிறேன் என்று பிதற்றினான். அதனால் பயந்த நண்பர்கள், கத்திபோன்ற பொருள்களைக் கூட அவன் கண்ணிற்படாமல் மறைக்கவேண்டியிருந்ததாம்.

இரண்டாண்டுகள், இப்படி நகர்ந்தன. மேரிடாட், அவனைச் சந்தித்து, "என்னைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும்" என்று வாதாடலானாள். கண்ணீர் பொழிந்தாள். தன்னை, அவளுக்காகத் தியாகம் செய்தான். திருமணம் நடந்து முடிந்தது.

அன்றுமுதல்கீரியும்கிளியும்ஆயினர்.என்ன சொன்னாலும், எப்படிக் கருதினாலும், ஏசினாலும், பேசினாலும், நையாண்டி செய்தாலும், எதிர்த்து எதுவுமே பேசமாட்டானாம், லிங்கன், மனைவியிடம். எரிச்சல் கொண்டதாகவோ, அதிருப்தி யடைந்ததாகவோ, ஆத்திரம் ஏற்படுவதாகவோ ஒரு நாளும் காட்டிக்கொண்டதில்லையாம். அதிசயமான ஆள்தான்! அவ்வளவுதூரம் பொறுமை, இருந்ததால்தான், 23-ஆண்டுகள், குடும்ப வாழ்க்கை என்கிற சஞ்சல சாகரத்தை அவனால் கடக்க முடிந்தது.

ஒரு சமயம், உலகெலாம் கொண்டாடும் அவனை அவன் துணைவி படுத்தியபாட்டை அறியும்போது, பரிதாபகரமாயிருக்கிறது. காலைநேரம் உணவு அருந்த கணவனும் மனைவியும்அமருகின்றனர்ஏதோலிங்கன்சொன்ன விஷயம் மேரிடாடுக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான், அங்கிருந்த சூடான காபியும் 'கப்'பும் பறந்தது அவனை நோக்கி! அவர்களிருவரையும் தவிர, வேறுபலரும் வந்திருந்தனராம், அன்று. அவர்கள் முன்னிலையில், இந்த 'மரியாதை'! எப்படியிருந்திருக்கும் அவனுக்கு? ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையாம்! பெருமூச்சுவிட்டவண்ணம், உடைகளைத் துடைத்தபடி, மறுபடியும் வந்து உட்கார்ந்துகொண்டானாம்.

கடைசிக்காலத்தில் மேரிடாடுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாம். பேதை கணவனை உணராத காரணத்தால், கஷ்ட நஷ்டங்களையும் வருவித்துக்கொண்டு, வாழ்க்கையை முட் காடாக்கிக்கொண்டாள்! லிங்கனும், தன்னுடைய அபாரமான சகிப்புத்தன்மையால், கடைசி வரையில் பெருமூச்சுகளைவிட்டவண்ணமே காலம் கழிக்க வேண்டியவனான்.

—"வண்டு"

★